0-1892MSL7A
N33
59102

1567

லா 9.

ஸ்ரீராமஜெயம்

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

துருவ சரித்திரம்

[illegible]: ஸ்ரீ பால வி[illegible]டக சபாவின் உபாத்தியாயர்

நாடகாசிரியர்: ச. க. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

சென்னை:

[illegible]நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1933. [விலை 0-6-0.

N33

ஸ்ரீ

P. S. வேலு நாயர், K. S. அனந்தநாராயண அய்யர்,
S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,
மதுரை பாலவினோத சங்கீத நாடக சபா,
சென்னை ஸ்ரீ பாலவினோத நாடக சபையார்
முதலியோர் நடத்திவரும்

"பாலபக்தன்"

அல்லது

துருவ சரித்திரம்

இது
உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்
சென்னை: ஸ்ரீ பாலவினோத நாடக சபாவின் உபாத்தியாயருமான
சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்
நாடகாசிரியர்:

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்

எழுதியது.

பிரசுரித்தவர்கள்:

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள்விலாச அச்சியந்திரசாலை,
சென்னை.

காபிரைட்] 1933. [விலை அணா 6.

O-,892 m5L7,T
N33

2711
894 8112

59102

முன்னுரை

"துருவ சரித்திரம்" என்னும் இக் கதை தமிழ் நாட்டிற் புராதனமான புண்ணிய சரித்திரமாகும். வெகுவா யிதை பாகவதர்கள் காலக்ஷேபத்தில் வெகு விமரிசையாக உபங்யாசிக்கின்றனர். அன்றியும், துருவ நாடகம் என்றும் சில சாரார் நடத்துகின்றனர். துருவ நாடகமும் அச்சிட் டிருக்கிறது. தற்காலத்திய தமிழ்நாடகமேடையிலிக் கதை பாலிய நடிகர்களாலேயே நடத்தப்பெறுகிறது. பல பெரிய நடிகர்கள் இதை நடத்தக் கண்டிலோம்.

சுமார் 12-வருஷத்துக்குமுன் என் தலைமையில் நடந்த ஸ்ரீ குமார லக்ஷ்மி விலாச சபா, ஸ்ரீ ஆரிய பாலகான சபா பாலியர்களுக்காக வேண்டி இக் கதையை தற்காலப் போக்கின்படி எழுதி நடத்தினேன். அது சமயம் நானெழுதிய எழுத்துப்பிரதி கைதவறி விட்டது.

சமீபத்தில் நடந்த எனது, ஸ்ரீ பாலவிநோத நாடக சபையின் நடிகர்களுக்காக வேண்டி இதனை மறுமுறையும் எழுத வாரம்பித்தேன். எனக்குதவியாக எனது மாணவர் சிதம்பரம்: C. D. குஞ்சிதபாதம் பிள்ளையவர்களும் இரண்டொரு சீன்களை எழுதிக் கொடுத்தார். கடைசியாக ஸ்ரீ பாலவிநோத நாடக சபா நடிகர்கள் இச் 'சரித்திரத்தை தக்க சீன்களுடன் மிக்க விமரிசையாக நடத்தி நற்பெயர் பெற்றனர். முறையே எனது நாடகங்களை அச்சிடக்கோரிய அபிமானிகளின் வேண்டுதற்படி இல்லறப் பொக்கிஷமென விளங்கு மிக்கதையையும் அச்சிடலானேன். அன்பர்கள் பலரும் இப் புஸ்தகத்தை வரவேற் றகமகிழ்வார்களெனக் கோருகிறேன்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாதலின், மற்றவர்கள் இப்புஸ்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.
நாடகாசிரியன்.

சென்னை.
27-3-33

Copy Right and Rights of Translation in any other Languages are reserved by the Publishers.

நாடக நடிகர்கள்:

உத்தானபாதன்	விதூஷாபுரி அரசன்
துருவன்	ஷை முதல் மனைவி குமாரன் (கதா நாயகன்)
உத்தமன்	ஷை இளையமனைவி குமாரன்
சுநீதி	அரசனது மனைவி (துருவன் தாயார்)
சுருசி	அரசனது இளையமனைவி (உத்தமன் தாயார்)
இந்திரன்	தேவலோகத்தரசன்
தேவர்கள்	தேவலோகவாசிகள்
சுந்தரம்	சுருசியின் தோழி
சுலோசனை	சுநீதியின் தோழி
ஞானாசிரியர்	அரசகுரு
நாரதர்	திரிலோக சஞ்சாரி
கோபாலன்	துருவன் சிநேகிதர்கள்
பரமானந்தன்	துருவன் சிநேகிதர்கள்
சுதர்சனம்	உத்தமன் சிநேகிதர்கள்
அரிஹரன்	உத்தமன் சிநேகிதர்கள்
சேவகன்	சுருசி வேலைக்காரன்
கோலைஞன்	அரண்மனை வேலையாள்
மகா விஷ்ணு	பக்த ரக்ஷகன்
இலக்ஷ்மி	ஷை யார் மனைவி

பூதங்கள், குடிஜனங்கள், மந்திரிபிரதானியர், புரோகிதர், மாயா சுநீதி முதலியோர்.

நாடகம் நிகழிடம்:

விதூஷாபுரி அடுத்த கானகம், மதுவனம், இந்திரபுரியுமாம்.

உ

ஸ்ரீ ராமாஞ்சநேய நம:

"பாலபக்தன்"

அல்லது

துருவ சரித்திரம்

விநாயகர் துதி வெண்பா

பாருலகி லேசிறந்த பாலபக்த னென்னுமொரு
பேர்புனையும் துருவகதை பேசுதற்குத்—தாரணியும்
துங்கக் கரிமுகத்தின் றூயவரு ளேசிறக்குந்
தங்கக் கழலிணையே சார்பு.

சீன்—1. **இடம்—மகாராணி மஹால்.**

நடிகர்:—சுருசி, (தோழி) சுந்தரம்.

[சுந்தரம் விசிறிக்கொண்டு வர, சுருசி வருகிறாள்]

சுந்தரம் பாட்டு

(துடிக்குமயிலில் நடிக்கும் என்ற மெட்டு)

கண்ணிகள்

மகிதலம்புகழ் மதிமுகராணி — மகாகல்யாணி
மாகதமணி பணிபுனைவேணி — இந்த
மாநிலந்தனி — லேபலவித
தான தர்மம — தேயிலகிய (மகி)

சுகுணசுந்தர சுரதகெம்பீரி — மகாவொய்யாரி
சுபவிரத சிங்காரசுந்தரி — பல
சோபிதமுறு — மாமதுரித
பூமகளெனு — காமமேறிகழ் (மகி)

[சுருசி ஓராசனத்தமர, சுந்தரம் பணிந்து நிற்கிறாள்]

சுருசி வ-ம்:—அடி, சுந்தரம்! இரண்டுநாளாக எனது மன்னவர் வாரா திருக்குங் காரண மென்னடி. தோழி! எப்போதும் என்னை விட்டுப் பிரியாதவரென்பது நீ யறிந்ததுதானே. ஆதலின்,

சுருசி பாட்டு

(பாங்கியரே என்னருமை என்ற மெட்டு)

கண்ணிகள்

ஏதுசெய்வேனென் சகியே நாதன்வரக்காணேனடி
காதல்மிகமீறினேனடி காமன்கணையினாலடி (ஏது)

முன்னமெனைமணர்ந்ததுரை என்னகோபங்கொண்டாரோதான்
இன்னதெனத்தெரிகிலேனடி எங்குதென்மனமடி (ஏது)

வ-ம்:—சுந்தாம் அவர் வராத விவரமென்ன சக்களத்தி சுநீதியாலேதாவது சூட்சி நடந்திருக்குமா. என்ன செய்வேனடி.

சுந். வ-ம்:—தேவி! அவ்வம்மையின் மீது பழிசுமத்துவது பாவமேயாகும் அம்மகாராசி இத்தனை காரியத்திற்கு வரமாட்டார்கள். ஏதுவோ ராஜகாரியார்த்தமாக மகாராஜா தர்பார் மண்டபமணுகியிருக்கலாம். அதனால் வரத்தவறியிருக்கும் இன்றெப்படியும் வருவாரென் றெண்ணுகிறேன்.

சுரு. வ-ம்:—சகி! அதிருக்கட்டும் இன்னொரு முக்கிய விசேஷம் உனக்குத் தெரியுமா.

சுந். வ-ம்:—தெரியாதம்மணி! அதென்ன விசேஷமோ.

சுருசி பாட்டு

(பாண்டியன் ஈன்ற என்ற மெட்டு)

மங்கையே	என்செய்வேன்	நானே	மனமது
	மயங்க	லானேனே	
தங்கையுங்	கற்ப	மானாளே	இந்நாளே
	தாரணி	மேலே	(மங்)
பார்க்கவே	பதருதென்	மனமே	சொர்னமே
	பார்த்திபன்	குணமே	
ஏர்க்கவே	சுநீதியின்	மேலே	மயங்கினால்
	ஏகுமென்	வாழ்வே	(ம

சுரு. வ-ம்:—பாங்கி! ஏதோ நான் செய்த பூஜாபலம் புத்ர சந்தானமடையவேண்டிய மகிமையை யடைந்தேன்- அச்சக்களத்தி சுநீதியும் கர்ப்பமடைந் திருக்கின்றனளாமே! என்ன கொடுமை! என்னாதர்,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ? இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

—புகழேந்தி

என்பதுபோல் புத் என்னும் நரகத்தினின்றும் மீட்கவேண்டியே துன்புற்றிருக்குஞ் சமயம் திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் தோன்றி ஓர் மாங்கனியைக் கொடுத்து உன திளையமனையாளுக்கு கொடுப்பாய் என்றுரைத் தகன்றனர். அவரும் அவ்வாறே கொடுக்க அக்கனியை யுண்டு கொட்டையை அகற்றினேன். அதை என்னாதர் சுநீதிக்குக்கொடுக்க அவளதை உண்டு அதுமுதலே கர்ப்பந் தரித்தனளாம்.

நான்தான் சகல சுகானுபவத்திற்கும் கொடுத்து வைத்தேன். அவளும் என்போலிருக்க முடியுமா? என்ன அறியாமை! எவ்வகையிலேனும் அவள் கர்ப்பத்தைக் கெடுக்கவேண்டும் அதற்கு உனது உரிமை எனக்கு வேண்டும் நீ என்னருமைப் பாங்கி யல்லவா? ஆதலால், நீ மனம்வைக்கின் நலமே பெறுவேன் என்ன சொல்கின்றனை நீ.

சுந். வ-ம்:—தாயே! தாங்களேன் இவ்வித பொறாமை யடைகிறீர்கள். தங்களுக்குங் கடவு ளனுக்ரகம் செய்திருக்கின்றாரே.

சுரு. வ-ம்:—என்னடி அனுக்ரகம் செய்திருக்கிறார். உனக்கென்னடி தெரியும்.

சுந். வ-ம்:—அம்மா, தாங்களும் இரண்டொரு மாதமாய் முழுகாமலிருக்கின்றீர்களே அது போதுமல்லவா.

சுரு. வ-ம்:—ஆமாமடி, அப்படியே உன் சொற்படி நான் பிரசவித்தாலும், எனது பிரசவம் ஆண்குழந்தையா யிருந்தாலும், மூத்த மனைவியின் குமாரனுக்குத்தானே பட்டந் தரிப்பார்கள். இதுவுலக வழக்கந்தானே.

சுந். வ-ம்:—ஏனம்மா, இது விஷயம் தங்களுக்குத் தெரிந்திருந்திருந்தும் தாங்களேன் இளையமனைவியாய் வாழ்க்கைப் பட்டீர்கள்.

சுரு. வ-ம்:—அதற்கென்னடி செய்வது. ஏதுவோ எனது காலவித்தியாசம் இளையவளாய் வாழ்க்கைப்பட நேர்ந்தது. இருந்தாலுமென்ன இளையவளுக் கிருக்குஞ் சொந்தம் மூத்தவளுக்குண்டா? அதுபோகட்டும், தோழி அந்த சுநீதியின் கற்பத்தைக்கெடுக்க ஒரு நல்ல உபாயஞ் சொல்லடி.

சுந். வ-ம்:—அம்மணி! தாங்கள் மொழிவது வேடிக்கையாகவே யிருக்கின்றன! மூடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோலிருக்கின்றது. எவ்வாறெனில்,

"ஒருத்தாரை என்செயலாம் ஊரெல்லாங்கூடி
வெருத்தாலும் போமோ விதி."

என்பதுபோல் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளுடைய திருக்கருணை யினாலே ஏற்பட்ட அச் சிசுஹத்தி தோஷத்தை யடைய எவா மனந்தான் ஈடுபடும்.

சுரு. வ-ம்:—போ போ பைத்தியக்காரி! இதெல்லாம் என்ன ஞாய மடி. முன்னோர்கள் என்னமோ எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள் அதை இன்னாளில் பேசுகிறாய் உம். (மௌனம்) சரி சரி! ஒரு யோசனை தோன்றுகின்றது அதுதான் சரி நான் அந்தச் சக்களத்தியிடம் சென்று ஏதாவது ஒரு கலகத்தை விளைத்து வருகிறேன். நாம் பேசிக்கொண்ட விஷயங்கள் மர்மமாகவே யிருக்கட்டும் ஜாக்கிரதை.

சுந். வ-ம்:—நல்லதம்மணி! தங்களிஷ்டம் எனக்கென்ன குறை தங்களுத்திரவு மீறுவேனா?

சுரு. வ-ம்:—என்னாதர் என்னிஷ்டப்படி நடக்கும்வரை என்காரியம் ஜெயமேயன்றி பயமில்லை. [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—2. **இடம்—சுநீதி வீடு.**

நடிகர்:—சுநீதி, சுருசி, (தோழி) சுலோசனை.

[சுநீதி தோழி சுலோசனையுடன் வருகிறாள்]

சுநீதி சுலோசனை பாட்டு

(ஆ சகிகாள் என்ற மெட்டு)

காமாக்ஷியே—அம்மா காமாக்ஷியே
காத்தருள்வாய் பூர்த்தருள்சேர்
கஞ்சமலர்ப்பதந் தஞ்சமென்றுவந்தேன் (காமா)

பூமீதடியவர் போற்றுமனோகரி
பொங்குமலங் காரியே—சங்கர
லிங்கன் க்ருபாகரியே
காமியமகற்றி யே என்னைக்காத்தருள்
காஞ்சிநகர் பெற்றுக்
காந்தி மிகுத்துற்றக் (காமா)

சுநீ. வ-ம்:—தேவி! திவ்யமங்கள தேசோன்மய சொரூபி! திருமால் திருமார்பிலுறை திவ்ய சிங்காரி! ஜெகத்ரட்சகி! அம்மணி! சமஸ்தகோடி புவனங்களுக்குந் தாய் தந்தையாகிய உன்னை யல்லாது என்னையாதரிக்க வேறு கதியார்.

சென்ற சில நாளைக்குமுன் என்தங்கை உண்டுமிழ்ந்த மாங்கனிக் கொட்டையைக் கொண்டு வந்து, எனது பிராணபதி என்னை யருந்தச் செய்தார். அவர் வாக்கியப்படியும், மகாத்மாவாகிய நாரதமுனிவ ராசீர்வாதப்படியும் நானுங் கற்பந்தரித்தேன். என் தங்கை சுருசியும் கற்பந் தரித்திருக்கின்றதாகக் கேழ்வி அது விஷயத்தில் எனக்கு மிக்க சந்தோஷமே.

அன்னையே அடியாரிடர் தீர்க்கும் அகிலாண்டேஸ்வரியே எம்மிருவர் கற்பமும் ஆண்குழந்தைகளாகவே வுதிக்க அருள்புரிய வேண்டும்.

சுலோ. வ-ம்—அம்மா, தாங்களேன் கவலைப்படவேண்டும். கட்டாயம் தங்களிருவருக்கும் ஆண் குழந்தையே ஜெனிக்கும்.

சுநீ. வ-ம்:—தோழி சுலோசனா, நான் கற்பந்தரித்த[illegible] முதல் எனது பிராணபதி என்னில்லந்தேடி ஒரு நாளும் வராத காரணமென்ன.

சுலோ. வ-ம்:—தேவி, தர்பார் காரியார்த்தமாக இருக்கலாம் அல்லது இளைய மகாராணியின் தூண்டுதலால் இங்குவராமலிருக்கலாம்.

சுநீ. வ-ம்:—சகி, எப்படியிருந்தாலும் சரி! எம்மிருவரில்லத்தில் எங்கேனும் என் பர்த்தா சுகமாயிருந்தால் போதும்.

சுலோ. வ.ம்:—(தனியாக) இந்தம்மாளுக்கு இந்த நினைவுதான். அந்தம்மாளுக்கு அந்த ஞாபகந்தான். நாமேனிதைச் சொல்ல வேண்டும் தானே தெரிந்து கொள்ளட்டும்.

[வெகு கோபமாக சுருசி வரக்கண்ட சுநீதி எழுந்து மரியாதையாக]

சுநீ. வ-ம்:—தங்கா, ஏனம்மா இத்தனைதூரம் நடந்துவந்தாய். அம்மா இவ்வாசனத்திலுட்காரு. (தோழியைப்பார்த்து) சுலோசனா உள்ளேசென்று தங்கைக்கு வேண்டிய பலகார பக்ஷணங்களைக் கொண்டுவா.

[சுலோசனா போகிறாள்]

சுருசி. வ-ம்:—போதுமடியம்மா உனதுபசாரம். எனக்கொரு மரியாதையும் உபசாரமும் வேண்டுமா. போதும் நிறுத்து உன் பொச்செரிப்பின் உபசாரத்தை.

சுநீ. வ.ம்:—தங்கா! ஏனிப்படி கர்ணகடூரமாகப் பேசுகிறாய். காரணமென்ன? நமது பர்த்தாவாலேற்பட்டக் கோபமா. அன்றி, பாங்கிகளால் விளைந்ததுன்பமா, விஷயமென்ன?

சுரு: வ-ம்:—அதையேனடி! நீ கேழ்க்கிறாய். என்னமோ என்தலைவிதி எனக்கிப்படி நேர்ந்தது. உன் பர்த்தா உன் பங்கிலிருக்கு

மளவும், நானுன் வீட்டிலிருக்கவும், உண்டிலைப்பாறவும் என[illegible]கென்னடி சொந்தமிருக்கிறது.

சுநீதி பாட்டு

(ஸ்ரீராம பாதமு என்ற மெட்டு)

பல்லவி

தங்கா நாமென்றுமே   செய்திலேன் சொல்வது
தகாதிது   தகாதிதுவே   (தங்)

அநுபல்லவி

இங்கே யுனக்கு   இல்லாத சொந்தமா
யேதுசூது வாதுகள்   செய்வதுனக்கு அந்தமா   (தங்)

சரணம்

தெய்வமேலாணை   செய்யு மென்மீது
தீதிலைபாராய்   செயலென்ன கூறாய்
ஐயையோ யிதுவே   அநியாயங்கேளாய்
அம்மாவுனக்   கடுக்காதிதுவே வெகுசீராய்   (தங்)

சுநீ. வ-ம்:—அம்மா! இந்த வீட்டில் உனக்கில்லாத சொந்தம் வேறுருக்கிருக்கிறது தங்கா! இவ்விதம்பேச எப்போது கற்றுக்கொண்டாய் ஐயோ பாபம்! ஏன் இப்படி பேசுகிறாய். நானோ உன்னைத் தேடி மணாளருக்கு மாலையிட்டு நானே உனக்குத் தீம்பு செய்ய நினைக்கில் நான் வாழ்வதெப்படியம்மா! வாழ்வும் தாழ்வும் மனித சரீர மேற்பட்டபொழுதே உடன் பிறந்ததல்லவா! என் மீது வீண்பழி சுமத்தாதே நானிச் சென்மத்தில் உனக்குப்பழி தேடுபவள் அல்லவே.

சுரு. வ-ம்:—நான்தான் பழிகாரி! நீ மகா கெட்டிக்காரி. பர்த்தா உனது பக்கமிருப்பதால் எவ்வளவும் செய்யலாம்.

சுநீ. வ-ம்:—ஏனம்மா! இப்படி குரோதம் கொள்ளுகிறாய் வேண்டாமம்மா.

சுரு. வ-ம்:—நானா! குரோதங்கொள்கிறேன். ஒருகாரணமுமின்றி நீதானே விரோதம் விளைத்திருக்கிறாய், யோசித்துப்பாரடி.

சுநீ. வ-ம்:—இதென்னயிது புதுமையா யிருக்கிறது. நீ பே[illegible]தொன்றும் விளங்கவில்லையே!

சுரு. வ-ம்:—அப்படியா சமாச்சாரம் உன்விஷயம் இப்போதுனக்கு விளங்குமா, ஏண்டி என் சகாயத்தால் நீயும் பிள்ளையார் வேஷம் போட்டுக்கொண்டாயே அந்த மம்மதையடி யுனக்கு.

சுருசி பாட்டு

(நாச்சகாரா என்ற மெட்டு)

பல்லவி

எட்டிப்போடி   எட்டிப்போடி—சும்மா
எத்துகின்றாய் வீணாய்க்   கத்துகின்றாய்   (எட்)

அநுபல்லவி

பட்டிவுன்வார்த்தை   பலுக்கறிவேனே
கொட்டியுளந்து   குலுக்குவதேனே
கோதகியே மகா   பாதகியே   (எட்)

சரணம்

பாவிநீபேசும்   பசப்பறிவேண்டி
பாசாங்குகாரிக்கை   வீசுவதேண்டி
பாதகியே கொடுங்   காதகியே   (எட்)

சுரு. வ-ம்:—ஏண்டி மேலுமேலும் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய் உன்னை தமக்கையென்று மதித்திருந்ததற்கு சரியான மரியாதை செய்து வைத்தாயடி எனக்கு. ஆமடி உன் புருஷனை நான் மயக்கி என் வயப்படுத்தி யிருந்தால் உனக் கெப்படியடி வயிறு பெருக்கும். இதை யறியாது என்னென்னவோ பினத்துகின்றாயாமே.

சுநீ. வ-ம்:—அம்மா! இன்னமும் நீபேசும்விதம் இன்னதென்றெனக்குப் புலப்படவில்லையே. கேட்பார் வார்த்தையைக் கேட்டு இப்படிப் பேசுவது தகாது. என்றால், உனக்கு நேர்ந்த இடையூறின்னவென்பதை எடுத்துச் சொன்னாலல்லவோ தெரியும்.

சுரு. வ-ம்:—இனிமேல் நானுனக்குப் பிரசங்கஞ்செய்ய வேண்டும். அடி! போடி போடி பொவுசுகெட்டவளே போனாள் போகிறாளென்று நாயகருக்கு எத்தனையோ நற்புத்திகள் புகன்று உன்னையும் என்னைப்போல் பாதுகாத்து வரும்படிச் சொல்லி யிருந்தால், என்னை மதியாதுபேச உனக்கித்தனை வாயா

தர்க்கம்

(என்னுசொந்தம் போடி என்ற மெட்டு)

[illegible]ரு   போதும்போதுஞ்   சண்டாளியே
போபோ முன்   நில்லாதே
வாதுசெய்வ   தேனோயிங்கு
வாழ்நா   ளழியாதே   (போ

(சொந்தமென்று வந்தேன் என்ற மெட்டு)

சுநீ
தங்காளன்மே — விந்தக்கோபந்
தானேகொள்ள — லானாய்
இங்கேவந்து — என்னைச்சீறி
யேசிடவுந் — தானாய் (தங்)

(ஷை மெட்டு)

சுரு
தானகவே — என்வாழ்வதை
தடுத்தாய் — படுநீலி
வீணைப்பல — விதமாகவே
மினுக்குஞ் — ஜெகஜாலி (தா)

(ஷை மெட்டு)

சுநீ
ஜாலநீலி — என்றேஎன்னைத்
தான்பேசிடுந் — தங்கா
காலவினை — தானேவேறு
காரணமென் — மங்கா (ஜாலி)

சுரு. வ-ம்:—காரணத்தையும் நானுனக்குச் சொல்லவேண்டுமா நல்லதம்மா நல்லது எல்லாக் காரணகாரியத்தையும் இரண்டு நாளில் தெரிவிக்கிறேன். அப்போது தெரிந்துகொள்வாய் அதுவரை அடங்கியிரு அதிகமாக வாயாடாதே நான் வருகிறேன்.

[போகிறாள் சுநீதி விசனத்துடன் நின்று]

சுநீதி பாட்டு

(காதலனும் வரக்காணாத என்ற மெட்டு)

கண்ணிகள்

தங்கையிந்தவிதம் — தாழ்த்திப்பேசிசென்ற
சங்கதியாதொன்றுங் — காணேன்
அங்கமுந்நோகுதே — ஆவிதுடிக்குதே
ஆனவிவாமுந் — தோணேன் (தங்)

காரணமில்லாமற் — கன்னியவளென்னைக்
கர்தகிஎன்றேச — லானாள்
தாரணிதன்னிலே — சதிஎன்னசெய்தேனோ
தங்கைமுனிந்தது — வீணாய் (தங்)

உ-ப்:—ஹே! பரந்தாமா, பக்தவத்ஸலா, பரமதயாளா, என தங்கை சுருசி யானவள் எதிர்பாராதவிதமாக வலுவில் வந் காரணமின்றிக் கடுஞ்சொற்பேசி, மனங்கசிந்து செல்வது காலவியல்பா, அல்ல தன்மகிமையா. எவ்விஷயத்தைக் கருதி

யும் அவளுக்கு நானொரு தீங்கிழைத்திலனே. அவ்விதமனமும் வகித்திலனே. ஏற்கெனவே என் பர்த்தாவானவர் அவள்மீதுள்ள ஆசையால் என்னைப் புறக்கணித்திருக்கிறாரென்பது நிச்சயம். மேலும் இப்போதிவள் இங்குவந்து வாதிட்டுச்செல்வதிலிருந்து வேறென்ன கோள்மூட்டுவாளோ. இதிலிருந்து எனக்கென்னென்ன இன்னல் விளையுமோ, அச்சுதா, மச்சகூர்மவராக வாமனவதார மகேந்திரா, நானே உனது பக்தை. அதிலும் பரிபூரண கர்ப்பிணி, அப்பனே ஒப்பிலாமணியே என்னைக் காப்பாற்றவேண்டும். (போகிறாள்)

(சீன் முடிவு)

சீன்—3. **இடம்—சுருசி வீடு.**

நடிகர்:—சுருசி, உத்தானபாதன், சுந்தரம்.

[சுருசி தலை விரிகோலமாகத் தரையிற் படுத்திருக்கிறாள். உத்தானபாதன் வெளிவந்து பார்த்து]

உத். வ-ம்.—ஆ! ஹா! இதென்ன காரணம் நான் வந்து நிற்பதையுங் கவனியாது எனது தேவியானவள் தலைவிரி கோலமாகத் தரையிற் படுத்திருக்கும் விஷய மின்னதெனத் தெரியவில்லை.

[அருகிற்செல்ல சுருசி எழுந்து நிற்கிறாள்]

உத்தானபாதன் விருத்தம்

கொஞ்சிடுங் கிளியே மானே குயிலெனு மொழியே தேனே
வஞ்சியர் திலத மின்னே வருத்தமாய் மனது வாடி
சஞ்சல மாகிநின்ற சங்கதி யறியகானே
அஞ்சலிலாமற் சொல்வாய் அதிவிரை வாகத்தானே.

பாட்டு

(பாலராமனையனே என்ற மெட்டு)

பல்லவி

கொஞ்சும் — பஞ்சவர்ணமே—மதன்
கோலாகலலீலைக் — கேற்றபெண்ணன்னமே (கொ

அநுபல்லவி

சஞ்சலமாகித் — தயங்கியதேன்மனம்
தையலரேவுன்னை — வைததாரித்தினம்

அஞ்சுகமேகோப   மானதைஎன்முன்னம்
அஞ்சாமலேசொல்வாய்   தென்பாகவேஎனைக் (கொ)

சரணம்

சொற்படிக்கேசெய்வேன்   சொல்லுவாயிப்போது
தோகையேநீமனச்   சோகமானதேது
சற்குணமாதரசே   என்சொல்தப்பாது
சாக்ஷியேனுவன   ஜாக்ஷிநீயேஎனைக் (கொ)

வ-ம்:—பிரியே, எதற்காக இவ்வித சோகங்கொண்டிருக்கிறாய். இது யாரால் நேர்ந்த சோகம். காரணத்தை இன்னதென்றுரைப்பாய் கண்மணி.

[சுருசி வேறு வார்த்தையின்றி]

சுருசி பாட்டு

(மாத்தாட பாராதேனே என்ற மெட்டு)

பல்லவி

பூமியிலேன் பிறந்தேன்   பெண்ணாகப்பாவி (பூமி)

அநுபல்லவி

சாமியருளிதுவோ   தையலறிகிலேனே
மாமனமிகவாடி   மயங்கிடலாகினேனே (பூமி)

பெண்ணாய்ப்பிறந்தநாளும்   பெற்றசுகங்கள்போதும்
எண்ணுதுயெண்ணிமன   மேங்கிப்பாதவிக்க (பூமி)

வ-ம்:—காரணமா, காரணம். உம் என்னவோ நான் பெண்ணாய்ப் பிறந்த பலன் எவரை நோவது பூர்வ வினைக்கூற்று.

உத். வ-ம்:—காந்தாமணி, நான் சதா காலமும் உன்னையே நேசிக்கிறேன். என்பது உனக்குத் தெரிந்திருந்தும் இவ்விதம் நீ சொல்வது தகாது. கண்ணே சமீபத்தில்வா. (கையைப் பிடிக்கிறான்)

சுரு. வ-ம்:—போதும் போதும். இப்பாவியைத் தொடுவதுந்தர்மமல்ல. தாங்களென்னைத்தொடவும் அருகரல்லர்.

தர்க்கம்

(காமபாண மீறுதே என்ற மெட்டு)

உத். கோபமென்னகூறடி   குறைதனைச்சொல்லடி
இதுநலமல்லடி
குணமாகுமுன்   மனமானது
ததிவாடிடத்   ததியிது
குறைதனைச்சொல்லடி   இதுநலமல்லடி (கோ)

சுரு. போதுபோதும்நேசமே   புகழ்வதுநிஜமே
இகழ்வதுவசமே
புரியுஞ்செயல்   மிதமிஞ்சிய
விதமானதென்   மன்னவா
புகழ்வதுநிஜமே   இகழ்வதுவசமே (போ)

உத். மாதர்போற்றும்வஞ்சியே   மதிமுகாதியே
அதிசுகவதியே
மகராசியே   மிகநேசியே
ஜெகமேதுதி   வாசியே
மதிமுகாதியே   அதிகுணவதியே (மா)

சுரு. எதுக்கிந்தசாகஸம்   எனதுவினைவசம்
இதுவிதிதுவஜம்
எதுவோஅதை   ததிநானுமே
சதிராயனு   பவித்திட
எனதுவினைவசம்   இதுவிதிதுவஜம் (ஏ)

சுரு. வ-ம்:—ஆம்; நான் எதில் சேர்ந்தவள். அழகில் சிறந்தவளா! அந்தஸ்தில் மிகுந்தவளா! என் நாதா யோசித்துப்பாரும். நான் ஏதாவது சொன்னால் என்னைக் காட்டுக்கனுப்பி விடுவீர்கள் அதுதானே செய்வீர்கள். என் தலையெழுத்தைப் போலாகுது

உத். வ-ம்:—என்ன என்ன! உன்னை காட்டிற்கா நானு; அனுப்பக் கூடியவன். ஓஹோ! அறிந்தேன். என் கண்மணி! அந்த சுநீதியினது தீச்செயல் போலும். உன் மனம்நோக அச்சண்டாளி இவ்வித கோட்பாடுகள் செய்தனள் போலும். ஆஹா! அடி பேதாய் உன் நிலைமையையுணராது என் காதற்கினிய கரபகத்தருவையா காட்டிற்கனுப்பயோசித்தனை இதோ உன்னையே அனுப்புகிறேன்.

சுரு. வ-ம்:—(கண்ஜாடை காட்டி) ஆ ஆ! என்ன அக்காள் சுநீதியம்மாளையா! பாபம் பாபம்! ஒன்று மறியாதவர்களாயிற்றே! அவர்கள் அவ்விதஞ் சொல்வார்களா! நல்லவர்களாச்சுதே நாதா! அவர்கள் விஷயத்தில் கொண்ட அந்த யெண்ணத்தை விட்டு விடும்,

உத். வ-ம்:—பேஷ்! நன்றுபுகன்றனை உன் விஷயத்தில் கெட்ட அபிப்ராயங் கொள்வதற்கு அவளைத்தவிர வேறு ஒருவருமிலர், ஆதலால் இனி எவ்வகையிலும் அவளை என்ன செய்கிறேன்பார்.

சுரு. வ-ம்:—ஐயோ! நாதா வேண்டாம் வேண்டாம்! நான் தங்களுக்கு ஏதோ உபதேசஞ் செய்துவிட்டதாகவல்லவா உலகநிந்தனையேற்படும் என்னைவேண்டியாவது அக்காரியத்தை மறந்துவிடும்.

உத். வ-ம்:—இனி! நான் கொண்ட காரியத்தை நிறைவேற்றாம லிருக்க மாட்டேன் அமர்வாய் காதலி!

சுரு. வ-ம்:—என்னமோ! விதியாரை விடும் அக்காள் உனக்கு இக் கதி யேற்படலாகுமா! உம்;

உத். வ-ம்:—மறுபடியும் அவள்மீ திரக்கங் காட்டுகின்றனையா பேஷ் நன்றாயிருக்கிறது ஞாயம்.

சுரு. வ-ம்:—அப்படியல்ல நாதா தற்சமயம் அக்காள் பூரண கர்ப்பிணியா யிருக்கிறாள். அதை யோசிக்கவேண்டு மல்லவா?

உத். வ-ம்:—யோசித்தேன் யோசித்தேன். (கடிதமெழுதி) ஆரங்கே தோழி.

[சுந்தரம் ஓடிவந்து பணிந்து நிற்கிறாள்]

அடிசுந்தரம் இக்கடிதத்தைக் கொண்டு அந்த சுநீதியிடம் கொடுத்து இப்போதே அவளைப் புறப்படச்சொல்.

[சுந்தரம் கடிதத்தைப் பெற்றுப் போகிறாள்]

சுரு. வ-ம்:—நாதா எதுவோ அக்கா அவர்கள் வாய்தவறி சொன்ன வார்த்தையை மன்னிக்க லாகாதா.

உத். வ-ம்:—மன்னிக்கலாம் மறுசமயம். நீ வா.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—4. இடம்—சுநீதி வீடு.

நடிகர்:—சுநீதி, சுந்தரம்.

சுநீதி பாட்டு

(காமசரக் தைக்குதடா என்றமெட்டு)

தெய்வமேநா னென்னசெய்வேன்
தேசத்தி லெவ்விதமுய்வேன் (தெ)

ஐயையோ என்மீதுதங்கை
ஆங்காரங் கொண்டாள்நங்கை
மொய்யோமெய்யோ தெரியேன் (தெ)

பொல்லாத பாவிஒன்று
சொல்லாமல் சொன்னாளின்று
எல்லாமுந்தன் செயலோ (தெ)

சுநீ. வ-ம்:—ஹே பரந்தாமா! பதுமநாபா! அந்தோ ஆடவர்கள் பெண்களை விளையாட்டுப் பதுமைகளாகக் கருதி யிருக்கின்றார்கள். நீதி வரம்பினின்றுஞ் சிறிதும் மாறாத என்னாருயிர்த் தலைவரும் என்மீ திரக்கமின்றி நடப்பதாலன்றோ என் தங்கை சுருசியும் அடாத வார்த்தைகளை உபயோகிக்க லானாள். என் போன்ற பெண்கள் என்செய்ய வல்லவர்கள் இல்லை இல்லை எல்லாம் பகவானது செயலன்றி வேறில்லை. ஆட்டிவைப்பவ னில்லாவிடில் அம் மரப்பாவைதானே ஆடுமோ.

[தோழி சுந்தரம் கடிதத் துடன் வந்து]

சுந். வ-ம்:—அம்மணி! நமஸ்காரம்.

சுநீ. வ-ம்:—சுந்தரம் இப்படிவா தங்கை சுருசி என்ன சொல்லி யனுப்பினாள்.

சுந். வ-ம்:—அன்னையே அந்தம்மாள் தங்களைப்பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், நமது மகாராஜா இக்கடிதத்தைத் தங்களிடங் கொடுக்கும்படிக் கொடுத் தனுப்பினார்.

சுநீ. வ-ம்:—சுந்தரம் அதிலெழுதி யிருப்பதின் விவரமென்ன வாசித்துச் சொல்.

சுந். வ-ம்:—அம்மணி! தாங்கள் சுருசியம்மாளைப் புருஷனுக்கு துற்போதனைசெய்து மருந்திட்டு மயக்கி விட்டாளென்றும், அதனால் அரசர் அந்தம்மாள் உத்திரவுபோல் நடக்கிறார்களென்றும் பலவிதமாகத் தூஷித்ததுடன், அந்தம்மாளைக் காட்டின் குடிசையில் சிறைவைப்பதாகச் சொன்னீர்களாம். அது விஷயத்தை மகாராஜா கேள்விப்பட்டு கோபங்கொண்டு தங்களையே குடிசைக்குப் போகும்படி எழுதி யிருக்கிறார்.

[சுநீதி மனத்திகிலுடன் கீழ்விழ, சுந்தரம் தூக்கி யுபசரிக்கிறாள்]

சுநீதி பாட்டு

(சங்கீதவாணி ப்ரம்மராணி என்ற மெட்டு)

இந்தப்பழிக் கென்னசெய்வேனே—மன்ன
னென்னை வெறுத்ததுவுமேனே (இந்)

வந்தயிப்பாவம் மாதவள்கோபம்
வாய்த்தவிதி எனக்குமாச்சே—மன்னர்
மனமும்வெறுக்கக் காலமாச்சே (இந்)

தெய்வசகாயம் தீர்க்குமபாயம்
செய்யும்வகையை யறியேனே—எவர்
செய்தவுபாய மிதுதானே (இந்)

சுநீ. வ-ம்:—தோழி சுந்தரம் இதென்ன அபாண்டமாக யிருக்கிறது. தெய்வ சாட்சியாக நான் ஒருவரிடமும் இவ்விதஞ் சொல்ல வில்லையே. எந்த மகானுபாவ ரிக்கலகத்துக்குக் கங்கண தாரணஞ் செய்தார்களோ போகட்டும் தோழி நான் பிரசவிக்கும் வரை இங்கிருந்து போவதாக வணங்கிக் கேட்டுக் கொண்டேனென்று எனது பர்த்தாவிடம் தெரிவிப்பதுடன், சுருசியிடமும் இதைச்சொல்லி பர்த்தாவுக்கு மனமிளகும்படி தெரிவிக்கச் சொல்.

சுந். வ-ம்:—அப்படியே ஆகட்டுமம்மா நான் சென்றுவருகிறேன்.

[போகிறாள்]

(சீன் முடிவு)

சீன்—5. இடம்—அந்தப்புரம்.

நடிகர்:—சுருசி, சுந்தரம்; உத்தானபாதன்.

சுரு. வ-ம்:—என்ன நிரூபங்கொடுத்தாயா?

சுந். வ-ம்:—அரசியாரே! நிரூபம்கொடுத்ததும் வாங்கிப் படித்துப் பார்த்து சோகமுற்றதுடன் தற்காலம் இருக்கும் நிலைமையை அனுசரித்து கர்ப்பவேதனை தீர்ந்த பிறகு வனஞ் செல்வதாகவும் அதற்கு அனுசரணையாக தாங்களும் அரசர் பெருமானுருக்கு சமாதானஞ் சொல்லவேண்டுமென்றும் விளம்பினார்கள் தாங்களும் உதவிசெய்தல் வேண்டுமம்மா?

சுரு வ-ம்:—இந்நாயிக்கு இதுவொருபவுஷா பேஷ்! அதுபோகட்டும் நான் சொல்கிறபடி நீ அரசர்முன் சொல்ல வேண்டும் எவ்வாறெனில் நிரூபத்தைக் கொடுத்ததாகவும் அதை அவள் கிழித்து பூமியில் போட்டு காலால் மிதித்து இந்த உத்திரவை நான் அங்கீகரிக்கமாட்டே னென்றும் உத்திரவுக்கு அடங்கி நடக்க முடியாதென்று உதாசினமாகப் பேசியதாகவும் சொல்ல வேணும்.

சுந். வ-ம்:—தாயே! அது என்னால் முடியாதகாரியம் இந்த வித அபாண்டமான பொய்யைச் சொல்வதற்கு என்மனம் ஒருக்காலும் இடந்தராது.

சுரு. வ-ம்:—என்னடி முழுகிப்போச்சு! நான் உனக்கு வேண்டிய அணிபணியாவும் தருவேன் நற்காலத்தைக் கெடுத்துக் கொள்ளாதே.

சுந். வ-ம்;—என் உயிர் போயினும் இது முடியாது.

சுரு. வ-ம்:—அப்படியா! யோசனைசெய் வருகிறேன்.

[சுருஸி உள்ளே போக]

சுந். வ-ம்:—ஏன் இந்தம்மாளுக்கு ஏற்பட்ட அடாத செய்கை ஒரு பாபமும் அறியாத அப்புனிதவதியின் மேல் இக்கொடூரமா நாம் இவ்விடம் இல்லாதொழிந்தாலும் இச்செய்கை நமக்கு வேண்டாம்.

[சுருசி வெளி வந்து]

சுரு. வ-ம்:—என்னடி முடிவுசெய்தாயா?

சுந். வ-ம்:—நான் முன்னமே சொல்லிவிட்டேனே!

சுரு. வ-ம்:—உம்; அப்படியா இருக்கட்டும் நீ சொல்லவேண்டாம். நான் சொல்கிறேன் அப்போது அரசர் உன்னைக்கேட்பார். ஆம் என்று தலையசைத்தால் போதும்.

சுந். வ-ம்:—அதற் கென்ன பார்ப்போம்.

[உத்தான பாதன் வருதல்]

சுரு. வ-ம்.—நாதா! அமருங்கள்.

உத். வ-ம்:—நல்லது சுநீதி அடவிக்கேகிவிட்டனளா?

சுரு. வ-ம்:—என்னமோ நாதா! கடிதம் கொண்டுகொடுத்தாளாம் வாங்கிப்பார்த்து அலக்ஷியமாக எறிந்து விட்டு இப்போதுபோக முடியாதென்று சொல்லிவிட்டார்களாம் போகட்டும் இது சமயம் அவர்கள்மீது இரக்கம் காட்டுங்கள்.

உத். வ-ம்:—அவளுக்கா! உனக்குயார் சொன்னது

சுரு. வ-ம்:—சகிதான் சொன்னாள். ஏனடி

சுந். வ-ம்:—அதென்னமோ! அம்மா உம்; (தலையசைத்தல்)

உத். வ-ம்:—காதற்கிளியே! என்ன வாஞ்சையுனக்கு அவள் மீது. இனி அதை மற. இப்போதே நான் சென்று அவளைக் காட்டிற் கோட்டிவருகிறேன் என் உத்தரவை அலக்ஷியஞ் செய்தவள் எதைச் செய்யத்துணியாள். ஆஹா சுநீதி வருகிறேன்.

சுரு. வ-ம்:—நாதா சிறிதுபொறுங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். பூரணகர்ப்பிணியை இப்படிக்காட்டுக் கோட்டுவது நல்லதல்ல பிறகு பிரஜைகளும் ஏனைய ராஜர்களும் நம்மைத்தான் குறை கூறுவார்கள் இதை நன்று யோசிக்கவேண்டும். பதறாத காரியம் சிதறாது கவனிக்கவும்.

உத். வ-ம்:—நீ என்ன சொல்லினும் என் செவியிடங்கொடாது சென்று வருகிறேன்.

[கோபமாய்ப் போகிறான்]

சுரு. வ-ம்:—அடி மூர்க்கியே! நான் சொன்னதென்ன நீ செய்த தென்ன என்ன வானாலும் சின்ன புத்தியுள்ளவள் தானே! போபோ என் முன்னில்லாதே.

சுந். வ-ம்:—ஏனம்மா இவ்விதக் கோபம் நான் தாள்வேனா! தாங்கள் ஏற்றுக்கொண்ட புண்ணியத்தை என்னையேற்றுக் கொள்ள வில்லை என்று கோபிக்கின்றீர்கள் போலும் சுகமேயிருங்கள்.

[இருவரும் போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—6. இடம்—சுருசி வீடு.

நடிகர்:—உத்தானபாதன், சுநீதி, சுலோசனா.

[உத்தானபாதன் கோபத்துடன் வர சுநீதி எழுந்து நமஸ்கரித்து]

சுநீ. வ-ம்:—நாதா, நான் செய்த பாக்கியமே பாக்கியம். தங்கள் வரவு நல்வரவாருக. இவ்வாசனத்தில் எழுந்தருளப் பிரார்த்திக் கிறேன்.

உத். வ-ம்:—சீ! சீ! எட்டி நில்லடி பிரஷ்டி நான் இட்டகட்டளையை அலக்ஷியஞ்செய்தும் என்னை அவமதித்தும், பலவிதம் பேசத் துணிந்த உன் நெஞ்சமே நெஞ்சம் கற்கபடி ஒன்றுமறியாத சுருசியைப் பலவாறிகழ்ந்தும் உன்னைப் புகழ்ந்துகொண்ட னையே. அச் சுருசியைக் காட்டிற்கொட்டுவதாகத் தெரிவித்த உனது நாவைத் துண்டிக்கலாகாதா.

சுநீ. வ-ம்:—நாதா! இப்பாழுமுடல் தங்களுக் கற்பணமான தன்றோ. இவ்வுடலைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் தங்களுக்குச் சொந்த மிருக்க தாங்களேன் வருந்துகின்றீர்கள். ஏழையாகிய நான் செய்தகுற்றம் ஒன்றுமில்லையே. என் மனத்திருப்தியாக இது வரை ஒருவரையும் நான் தூஷித்ததில்லையே. என்மேல் ஏற் பட்ட குற்றமென்ன.

உத்தானபாதன் பாட்டு

(வலைதப்பியக்குறமான்களே என்ற மெட்டு)

கண்ணிகள்

தாதியிடஞ்சொன்ன சேதியைக்கேட்டுமே
நீதிகள்பேசியே சாதித்ததேனடி
பாதகியேகொடுங் காதகியேஎதிர்
வாதுசெய்யாதுஇப் போதுசெல்வாயடி (தா)

மன்னவனென்றென்னை சற்றுமதியாது
மங்கைசுருசி மனமறியாது
என்னசொன்னாயடி பின்னமடையாமல்
இப்பொழுதேயோடித் தப்பித்துக்கொள்ளடி (தா)

வ-ம்:—கெடுமதி கண்ணுக்குப் புலப்படவில்லைபோலும் செய்யவேண் டிய கொடுமைகளைச் செய்தும் அதைமறைக்க என்ன சாகஸம் என்ன பொய் இவ் விபரீத விஷயத்தை எப்போது கற்றுக் கொண்டனை.

சுநீ. வ-ம்:—பிராணபதி தங்கள் சாட்சியாகத் தங்கை சுருசியையா வது தங்களையாவது நானொன்றுஞ் சொல்லவில்லையே.

உத். வ-ம்:—பேசுவதெல்லாம் சுத்தப் பொய்! என்னிடத்திலும் பேசத்துணிந்தனையா?

சுநீ. வ-ம்:—ஐயோ தெய்வமே! இதற்கோ நான் பெண்ணாய்ப் பிறந் தேன். அரசரே! பொய்யென்றால் சாமான்ய முற்றதல்லவே! கேளும். 100 பசுவைக்கொன்றால் ஓர் பிராமணனைக் கொன்றதா கும். 100 பிராமணரைக்கொன்றால் ஓர் பெண்ணைக்கொன்றதா கும். 100 பெண்களைக்கொன்றால் ஓர் சிசுவைக் கொன்றதா கும். 100 சிசுவைக்கொன்றால் எவ்வளவு பாபஞ்சேருமோ அவ்வளவு ஓர் பொய்யைச் சொல்வதற்கு ஏற்ற தண்டனையாகு மென்பதை நானறிவேன் ஆதலால் நான் நிரபராதி என்பது தாங்கள் நன்கு அறிந்தவிஷயம்.

உத். வ-ம்:—ஓ! இவற்றையெல்லாம் நான் ஏற்கேன். இக்ஷணமே இவ் வில்லம் விட்டுக் காடேகுவாய்.

சுநீ. வ-ம்:—ஆ! ஆ! பிராணபதி என்னை மனமுவந்து காட்டுக் கனுப்ப யெண்ணங்கொண்டீரே! இது தகுமா, இது முறையா, இது தர்மந்தானா, என்னிறைவரே! அடியாள்மீது அன்புகூர்ந்து நான் பிரசவமாகும்வரையிலும் இங்கிருக்க உத்திரவுகொடும். பின்னர் தங்களிஷ்டப்படியே நான் காடேகிறேன்.

உத். வ-ம்:—உன்னிஷ்டமா! என்னிஷ்டமா! நீயோ எனக்கு ஞாய முறைப்பவள். சட் பேசாதே! இப்பொழுதே சென்று காவலர் களை அனுப்புகிறேன். அவர்களுடன் காட்டிற்கேகி விடு.

சுநீ. வ-ம்:—நாதர் என் முகத்தைப்பாரும் இன்னும் பத்துநாள் வரை இங்கிருந்துபோக வுத்திரவுகொடும்.

[காலைப்பிடிக்கிறாள் அரசன் அவளைத் கீழே தள்ளிவிட்டு]

உத். வ-ம்:—போடி போ! அரைக்ஷணமும் அரண்மனையிலிருக்கப் படாது. மீறினால் தாறுமாறாகும். (போகிறான்)

[தோழி சுலோசனை ஓடிவந்து சுநீதியைத் தூக்கி உபசரிக்கிறாள்]

சுநீதி பாட்டு

சங்கராபரணம் ரூபக-தாளம்

பல்லவி

ஏனோ பெண்ணாய்ப் பிறந்தேன்
ஈசனே ஜெக தீசனே நான் (ஏ)

அநுபல்லவி

வீணாக என்னைப்பேசி
வெறுத்துச் சென்றாரே மன்னர் (ஏ)

சரணம்

பூர்வகர்மத்திற்செய்த பொல்லாங்கின் வினைதானோ
போற்றுமென்னாதனென்னைத் தூற்றிச்சென்றதுமேனோ
பேர்பெற்றபலனீதோ பெரும்பாவிவிதியிதோ
சீர்பெற்றவுலகத்தில் சீச்சீநானொருஜென்மம் (ஏ)

[உள்ளே போகிறாள்]

(சீன் முடிவு)

சீன்—6. இடம்—காடு (குடிசை)

நடிகர்:—சுநீதி, சுலோசனை, கோபாலன், பரமானந்தன்.

சுநீதி பாட்டு

பாராய்பரந்தாமனே பாவிஎன்றுயர்
தீராய்ப் பரந்தாமனே (பாரா)

வேறுருந்தனையன்றி வேளைஎந்தனைக்காக்க
தாரார்புவிபுகழுந் தாமோதரானந்தனே (பாரா)

ஆனையலறவந்து தானேகாத்திட்டதேவா
நானேவுனைநம்பினேன் நாயகிஎந்தன்முகம் (பாரா)

வ-ம்:—தோழி பார்த்தனையா! எனது விதியின் பலனை, என்னால் சகிக்கவுங் கூடவில்லை ஐயோ நானொரு ஏழைவயிற்றிற் பிறந்து ஏழையை மணஞ் செய்திருக்கினும் இவ்வித சந்தர்ப்பத்தில் எனக்கு இக்கஷ்டம் நேராதல்லவா.

சுலோ. வ-ம்:—அம்மா! தாங்கள் இவ்விதம் துயரமடைவது நன்றல்ல, இப்போது தாங்கள் இவ்வித மனக்கவலை யடைந்தால் கர்ப்ப வேதனை அதிகரிக்கும் ஆகவே இனிமேல்

தர்க்கம்

(மாங்காயழுகிவிடும் என்ற மெட்டு)

சுலோ. சோகமடைய வேண்டாம்—சுக
போகமுடன் வாழ்வீரம்மா

சுநீ. போகமுடன் வாழ்வதற்கு—நான்
பூர்வ புண்யஞ் செய்திட்டேனோ

சுலோ. பூர்வ புண்யம் செய்ததாலே—நல்ல
புத்திரனைப் பெற்றெடுப்பீர்

சுநீ. புத்திரனைப் பெற்றெடுத்தால்—என்
புருஷன் மனந்திரும்புமோ தான்

சுலோ. திரும்பி வருவா ரம்மா—உன்
சிந்தைதுயர் தீருமம்மா

சுநீ. வ-ம்:—தோழி! சுலோசனை தெய்வ சம்மதப்படி நடப்பது நடக்கட்டும். வயிற்று வலி அதிகமாகிறது குடிசைக்குள் போகலாம் வா. [கோபாலன் ஓடிவருகிறான்]

கோபா. வ-ம்:—தாயே! நமஸ்காரம்.

சுநீ. வ-ம்:—கோபாலா! இவ்வளவு வேகமாக ஓடிவந்த காரணமென்ன.

கோபா. வ-ம்:—அம்மா! மகாராஜாவானவர் தங்களுக்குத் தினந்தோறும் வேண்டிய உணவுப் பொருள்களை அரண்மனையிலிருந்து கொண்டுபோய்த் தரும்படி கட்டளையிட்டார். தவிரவும், சுருசியம்மாளால் தங்களுக்கும் கர்ப்பத்திற்கும் சூழ்ச்சி நேராமல் பாதுகாக்கும்படி சுலோசனைக்கு சொல்லிப் போகவும் வேகமா யோடி வந்தேன்.

சுலோ. வ-ம்:—கோபாலா! தற்சமயம் மகாராணியார் பிரசவ வேதனையில்தா னிருக்கிறார்கள் சந்தேகமில்லை. பிரசவித்தவுடன் கஸ்தூரி, கோரோசனம் முதலிய வஸ்துக்கள் கொடுக்க வேண்டுமே நானும் மறதியாய் வந்துவிட்டேனே என் செய்வது.

கோபா. வ-ம்:—அதற்குக் கவலைவேண்டாம். பிரசவித்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய மருந்து வகைகளை நான் கொண்டுவந்திருக்கிறேன். எல்லாம் இந்த மூட்டையில் இருக்கிறது.

[சுலோசனையிடம் மூட்டையைத்தருகிறான்]

சுலோ. வ-ம்:—நல்லது; கோபாலர்! சுருசிவகை ஏவலர்கள் வேறுரும் வராமல் பார்த்துக்கொள். அம்மா! வாருங்கள் குடிசைக்குள் போகலாம்.

[கோபாலன் ஒருபுறமிருக்கிறன். சுநீதி சுலோசனையுடன் குடிசைக்குள் செல்கிறள்]

சுலோ. வ-ம்:—(ஓடிவந்து) கோபாலா! கோபாலா!! கோடிசூர்யப்பிரகாசம்போன்ற ஓராண் குழந்தையை மகாராணியார் பிரசவித்தாள்.

கோபா. வ-ம்:—அப்படியா மெத்த சந்தோஷம்; உலக ரட்சகனென விருதுகொண்ட காருண்யவள்ளல் கைவிடுவரா. நீ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். நான் அரண்மனைக் கேகி வேண்டிய வஸ்துக்களைக் கொண்டு வருகிறேன்.

சுலோ. புத்திர ஜெனனத்தை வெளியிட வேண்டாம்.

கோபா. வ-ம்:—தெரியுந் தெரியும்.

[போகிறன் பரமானந்தன் வருகிறன்]

பரமா. வ-ம்:—மஹா துர்லபம் துர்லபம்! உலகில் இரண்டு பெண்டாட்டிக்காரர்களின் திண்டாட்டத்தைக் கண்டும், எனக்கு வாய்த்த பெண்ஜாதிகள் இஷ்டம்போல் இருந்து நான் வருகிறேன். அப்படிக்கிருந்தும் நான் கடவுளுக்குப் பயந்து நடந்தாலும் அவளவளும் என்மீது பழியே சுமத்துகின்றூர்கள். இது என் கன்மவினை ஒருபுறமிருக்க, அரண்மனையி லிருந்தேன் சுருசியம்மாள் எனக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து, சுநீதியம்மாளுக்குப் பிறக்கும் குழந்தையை எப்படியாவது கொலைசெய்ய வேண்டுமென் றேவினர். நான் அப்படி செய்யின் எனக்குள்ள மனைவி மக்களுக்குத் துரோகஞ் செய்தவனவேன். ஆதலால், அங்கிருப்பதைவிட சுநீதியம்மாளுக்கு வேண்டிய சிஷ்ருஷைகளைச் செய்து காலங்கடத்துவதே மேலென்று இவண் நாடினேன். ஐயோ பாவம் அரண்மனையி லிருந்த, அரசியார் ஆரண்யத்திலே குடில் வாசஞ்செய்தல் நீதியோ? இருக்கட்டும். 'அவரவர்வினையி லவரவர் வருவர்' என்பதின் உண்மை நன்குவிளங்கலாயின. ஏ சுலோசனு.

சுலோ. வ-ம்:—யாரது! ஓஹோ பரமானந்தரா! வாரும்; வாரும். ஏது இவ்வளவு தூரம்?

பரமா. வ-ம்:—அம்மா சுகமா யிருக்கின்றனரா?

சுலோ. வ-ம்:—சுகமே; ஆண்குழந்தை கோடிசூர்யப்ரகாசமுடன் ஜெனனமாகின. சர்வ ஜாக்ரதையாக பாதுகாத்து வருகிறேன்.

பரமா. வ-ம்:—நல்லது; நானும் அதைக் கோறியே வந்தனன். அக்கொடூர வன்னெஞ்சமுடைய சுருசியின் தூண்டுதலால் குழந்தைக்கு ஏதாவது விபத்தேற்படுமென்றே நான் இங்குற்றேன் தெரியுமா.

சுலோ. வ-ம்:—ஆம்; எல்லா மறிவேன். நான் அவ்வகையி லீடுபடுவதாயின் இவண் வரவேண்டிய வேலையில்லையே போகட்டும். கோபாலன் வரும்வரை ஜாக்ரதையா யிருக்கவேண்டும்.

பரமா. வ-ம்:—அதைவிட வேறென்ன வேலை யிருக்கிறது.

(சீன் முடிவு) [போகின்றனர்]

சீன்—7. இடம்—வீதி.

நடிகர்:—கோபாலன், புரோகிதர்.

புரோ. வ-ம்:—கோபாலா குழந்தை பிறந்து இன்றெத்தனை நாளாகிறது.

கோ. வ-ம்:—சுவாமி! இன்றுடன் நாள்பதினென்றாகிறது ஆகவே இன்று செய்ய வேண்டிய சடங்கு தவறக்கூடாதே என்று தங்களைக் கூப்பிட வந்தேன்.

புரோ.வ-ம்:—மகாராஜா! இல்லாமல் நாமகரணம் ஜாதக கன்மம் செய்யப்படாதே மீறி செய்தால் அரசர் என்னைக் கோபிப்பாரே.

கோ. வ-ம்:—தங்களுக்கு அந்தபயம் வேண்டாம் மகாராணியார் உத்திரவின்படி நான் சென்று மகாராஜாவைக் கூப்பிட்டேன் அவர் வரமுடியாதென்று சொல்லி விட்டார் வேறென் செய்வது.

புரோ. வ-ம்:—அப்படியா சமாச்சாரம் இளையமனைவியின் காதல் இப்படியா யிருக்கிறது.

கோ. வ-ம்:—சுவாமி! இளைய மகாராணியாகிய சுருசியம்மாளுக்கும் ஓராண்குழந்தை பிரசவமாகி இன்றுடன் எட்டு நாளாகிறது.

புரோ. வ-ம்:—ஆனுலென்ன மூத்த மனைவியின் குமாரனுக்குத்தானே பட்டம் கட்டுவார்கள்.

கோ. வ-ம்:—அது விஷயம் அது சமயம் பார்க்கலாம் நேரமாகிறது வாருங்கள். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—8. **இடம்—காடு குடிசை.**

நடிகர்:—சுநீதி, சுலோசனை பரமானந்தன், கோபாலன்.

சுநீதி பாட்டு

(நீலாம்புரி தாலாட்டு மெட்டு)

திருவே திருவிளக்கே தேசசிரோரத்தினமே
பொருளார்ந்தபூஷணமே பொன்மணியேகண்வளராய்

காட்டின்குடிசையிலே கற்பகமேநீபிறக்க
நாட்டின்புதுமையடா நாயகமேகண்வளராய்

பாராளவேபிறந்த பாலகனேஎன்மகனே
சீரானதெள்ளமுதே தினகரனேகண்வளராய்

வ-ம்:—அப்பா, என் கண்மணியே! நீயேனிப்படி அழுகின்றாய்? பகவான் உனக்கு இக்காட்டின் குடிசையில் வசிக்கக் கட்டளையிட்டது விலகுமா, மன்னாதிமன்னர்புகழ மணிமுடி தரிக்கக்கூடியநீ இக்கொடிய காட்டில் வசிக்கும் மிருகஜாதிகள் மனம்வருந்த விம்மிவிம்மி யழுவதில் என்னபலன், மகனே அழாதே.

சுலோ. வ-ம்:—அம்மா! என் வருந்துகிறீர்கள்? தங்கள் குழந்தை எங்கள் இளைய மகாராஜாவுக்கு எவ்வித துன்பமும் நேராது. அவர் முகத்தைப் பார்த்தவுடன் எப்பேர்ப்பட்ட அரசரும் போற்றிப் புகழ்வார்களென்றால் இனி தங்களுக்கு துக்கமேது?

கோபா. வ-ம்:—தாயே! புரோகிதர் தெரிவித்த நாமதேயப்படி எங்கள் இளவரசர் துருவச் சக்கிரவர்த்தியாகவே விளங்குவார். தாங்கள் கவலையடைய வேண்டாமம்மா.

பர. வ-ம்:—தேவி! பதினோராவது நாளாகிய இன்று எங்கள் இளவரசருக்கு நாமகரணம் ஜாதககன்மம் குறித்துத் தங்களுக்கும் ஸ்நானம் செய்து வைத்திருக்கிறது. இன்றையதினம் தாங்கள் இப்படி வருந்தலாமா. சந்தோஷமா யிருங்களம்மா.

சுலோ. வ-ம்:—அம்மா சமையலாகிவிட்டது. குழந்தை தூங்கி எழுந்திருப்பதற்குள் போசனம் செய்யலாம் வாருங்கள்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—9. **இடம்—சுருசிவீடு.**

நடிகர்:—சுருசி, சுந்தரி.

சுரு. வ-ம்:—நானெடுத்த காரியங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீர் போலாயின. அந்த சக்களத்தியைக் காட்டிற் கோட்டியும் அவளும் அவள்பெற்ற பிள்ளையும் சுகமா யிருக்கிறார்களாம்.

பாட்டு

(வேதவாணி புராணி என்றமெட்டு)

பல்லவி

ஏது செய்குவேன் நானே—மன
மேங்கி வாட லானேன் (ஏது)

அநுபல்லவி

மாது சுநீதி மாமக னீன்றாள் (ஏது)

சரணம்

நினைத்தவெ னெண்ணம் நிகழ்ந்திடா வண்ணம்
மனக்குறை வின்றியவள் மகனையு மீன்றாள் (ஏ)

துருவனின் பேரே சொல்லுமிவ் வூரே
கெருவ மடக்காவிடில் கேலி செய்வாரே (ஏ)

வ-ம்:—எவ்வகையிலும் அந்தத் துருவனென்னும் பயலின் கெருவத்தையடக்கி வைக்கவேண்டும். இல்லாவிடில் இவ்வூரார் பலரும் என்னை ஏளனம் செய்வார்கள்.

[யோசித்தவண்ணம் இருக்கிறாள்,
தாதி சுந்தரம் வருகிறாள்]

சுரு. வ-ம்:—ஏனடி சுந்தரம், அந்தப்பயல் துருவன் ஊருக்குள் வந்து உத்தமனுடன் விளையாடுகின்றானாமே, இது வுண்மை தானா?

சுந். வ-ம்:—ஆமம்மா, தங்கள் உத்தமனுடனும் மற்ற பிள்ளைகளுடனும் துருவன் விளையாடுவதைக் கண்டு ஊரார் பலரும், துருவனுக்கு ஆலஞ்சுத்தி திருஷ்டி கழித்து அனுப்புவதுடன் இராஜமரியாதையும் செய்கிறார்கள் தாயே.

சுரு. வ-ம்:—ஏனடி அவனுக்கு ராஜமரியாதை செய்யவேண்டும்.

சுந். வ-ம்:—இப்பட்டத்திற்கு துருவன் இளவரச னல்லவா?

சுரு. வ-ம்:—(யோசித்து) அடிசுந்தரம் நீ சொல்லுவதைக் கவனிக்க நீயே எனக்குத் துரோகம் செய்திருக்கிறா என்று தெரிகிறது.

சுந். வ-ம்:—அதேனம்மணி! அப்படிச் சொல்கின்றீர்கள்?

சுரு. வ-ம்:—ஏண்டி உன்னிடம் நான் கொடுத்த மருந்து முதலிய வற்றை என்ன செய்தாயடி?

சுந். வ-ம்:—அம்மா! என்மீது கோபிக்கவேண்டாம், தங்களுத்தர வின்படியே நான் மருந்து முதலியவற்றைக் கோபாலன் பரமா னந்தன் இவர்களிடங் கொடுத்தனுப்பினேன். அவர்கள் அந் தம்மாள் மீதுற்ற பாசத்தால் அதை நிராகரித்து விட்டார்கள். இதற்கு நானென் செய்வேனம்மா, தவிறவும், அந்தம்மாள் பங் கில் பகவான் கிருபை பலித்து நிற்கிறது.

சுரு. வ-ம்:—போகட்டும், என் மகன் உத்தமனைப்பற்றி குடிஜனங் கள் என்ன சொல்கின்றார்கள்?

சுந். வ-ம்:—தேவி! தங்கள் குழந்தை உத்தமனைக் காணும் மற்றவர், துருவசகோதரன் இதோ போகிறானென்று சொல்கின்றனர். ஆனால் யுவராஜ வந்தனோபசாரங்களைத் துருவனுக்கே செய்கின் றனர்.

சுரு. வ-ம்:— அப்படியா, பார்க்கிறேன் ஒருகை, இந்த ஊராரின் சாமர்த்தியத்தை, சுந்தரம் அந்தப்பயல் துருவனை அரண்மனைக் குள் வரவிடாமலும், அரசர் கண்ணில் தென்படாமலும் சர்வ ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்

சுந். வ-ம்:—ஆகட்டுமம்மா, அதற்குத் தடையா.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—10.

இடம்—ராஜ வீதி.

நடிகர்:—துருவன், உத்தமன், கோபாலன், பரமானந்தன், சுதர்சனம், அரிஹரன்.

[எல்லோரும் கையில் கோலியும் பந்தும் கொண்டு வருகின்றனர்]

சகலரும் பாடுதல்

(சவாரிபோவோம் வாருங்கள் என்ற மெட்டு)

வாரீர்வாரீரென்தோழரே வரிசையாகப்பந்தாடப்
பாரீரெல்லோரும்—பக்கமாகநின்றுமே
பந்தாடுவோம்பந்தாடுவோம் பலருமொன்றாய்க்கூடியே
நின்றோடுவோம்நின்றோடுவோம் நேருக்குநேராய்நாடியே (வா)

சேரீர்சேரீரொன்றாகவே செண்டுபோல்பந்துமேற்செல
நேரில்நின்றுமே—நிதானமாய்ப்பிரிந்துமே
நெருங்குவோம்நெருங்குவோம் நிமைக்குமுன்பதுங்குவோம்
அருந்துவோம்அருந்துவோம் ஆயாசந்தீர ஆவின்பால் (வா)

பரமா. வ-ம்:—அப்பா துருவா! நீ போடும் பந்தைப் பிடிக்க உத்தம னாலு முடியவில்லை. அவன் கட்சியைச் சேர்ந்த அரிஹரன் சுதர்சனனாலு முடியவில்லை.

சுதர். வ-ம்:—அட போடா கோமாளி! என்னடா உன் துருவனைப் புகழ்ந்து பேசுகின்றாய். எங்கள் உத்தமன் தூக்கி யெறிந்த பந்தை உங்கள் துருவன் பிடித்தானடா.

கோபா. வ-ம்:—அடே எங்கள் துருவன் பந்து பிடித்ததை நீ பார்க்கவில்லை. குருட்டுக்கண்ணன்தானடா நீ.

சுதர். வ-ம்:—அடே யாரடா குருட்டுக்கண்ணன் துருவனா; அல்லது உத்தமனா யோசித்துப் பேசடா.

துரு. வ-ம்:—தோழர்களே! யார் பந்து பிடித்தாலென்ன, பிடிக்கா விட்டாலென்ன? என் தம்பி உத்தமன்கட்சியே ஜெயித்தால் அதில் பாதி ஜெயம் எனக்குண் டல்லவா.

உத்த. வ-ம்:—அண்ணா! அறியாத்தனமாக இவர்கள் சச்சரவுசெய்து கொள்கின்றார்கள். எப்படியும் போகட்டும். வாங்க ளண்ணா இன்னுஞ் சிலநேரம் கோலியாடலாம்.

துரு. வ-ம்:—தம்பி உத்தமா! இதுவரை விளையாடினது போதும். இனிமேல் நாம் சத்விஷயமான பிரசங்கஞ்செய்து பொழுது போக்குவோம்.

உத். வ-ம்.—அண்ணா! இன்னுஞ் சிலநேரம் கோலியாடிவிட்டுப் பின் வேறு காரியம் பார்க்கலாம்.

பரமா. வ-ம்:—அதுவும் சரி; நானும் கோபாலனும் துருவனும் ஒரு கட்சியி லிருக்கிறோம் யார் கெலிப்பார்களோ பார்ப்போம்.

அரிஹர. வ-ம்:—அடடே உத்தமன், நான், சுதர்சனம் மூவரும் ஒரு கட்சியடா பாரடா நாங்கள் கெலிக்கிறோம்.

[கட்சிப் பிரிவினைசெய்து கோலியாடுகின்றனர்]

சகலரும் பாடுதல் பாட்டு

ஆடுவோம்கோலி ஆவலுடனுமனைவருங்கூடி (ஆடு)
ஓடிடாமலே ஒளிந்திடாமலே
சாடிசெய்யாமலே சம்மதித்தேயின்று (ஆடு)

தம்பிநீவாடா — தம்பிடி நாடா
கும்பலில்போடா — கொப்பெனவேயின்று (ஆடு)
அடிக்கொருகாசு — குழிக்கொருபைசா
ஆடுவோம்நேசா — ஆனந்தமுடனே (ஆடு)

[எல்லோரும் விளையாட துருவன் கட்சி ஜெயிக்கிறது]

பரமா. வ-ம்:—அடடே அதிஷ்டமில்லாத உத்தமன் கட்சி தோற்று விட்டதடா.

[கோபாலன் துருவன் இருவரும் சிரிக்கின்றனர்]

சுதர். வ-ம்:—அடே பரமானந்தா! யாருக்கடா அதிஷ்டமில்லை. உங்கள் துருவன் அதிஷ்டமில்லாததினால் காட்டின் குடிசையில் வசிக்கிறான். அதிஷ்டமுள்ள எங்கள் உத்தமன் அரண்மனையில் வசிக்கிறான்.

அரி. வ-ம்:—ஆமாமடா இப்போது எங்கள் துருவன் அரண்மனைக்குப் போவானாகில் பலவித பலகாரங்களைக் கொண்டு வருவான். நாங்கள் தின்று ருசி பார்ப்போம்.

சுதர். வ-ம்:—உங்கள் துருவன் காட்டின்குடிசைக்குப் போனால் காய் கனி கிழங்குகளைக் கொண்டுவருவான். அதனாலென்னடா உங்களுக்குப் பலன்கிடைத்தது.

பரமா. வ-ம்:—அடே நீங்கள் பேசுவதெல்லாம் சரிதான். இருந்தாலும், இன்றைக்கில்லாவிடினும் இவ்வூருக்கு இளைய மகாராஜாவாகிய துருவனுக்கு நாளைக்கே அதிஷ்டம் வருமடா.

அரி. வ-ம்:—ஏண்டா வீண்வாது. யாரடா இளைய மகாராஜா.

கோபா. வ-ம்:—எங்கள் மகாராணியின் மகன் துருவன்தானடா உனக்கும் எனக்கும் யுவராஜா.

சுதர். வ-ம்:—அடேகோபாலா நிதானித்துப்பேசு மகாராஜா மூத்த மனைவியின் நாற்றமே கூடாதென்று காட்டிற் கோட்டிவிட்ட பிறகு எங்கள் உத்தமன்தானடா யுவராஜா.

அரி. வ-ம்:—இதெல்லாம் வீண்பேச்சு இப்போது எங்கள் உத்தமன் அரண்மனைக்குப் போனால் சிம்மாசனத்தி லமர்ந்திருக்கும் அரசர் மடிமீதும் அமர்வான் உங்கள் துருவனுக்கு அச்சுதந்திரமுண்டா?

பர. வ-ம்:—அடே போடா மடையா! முதல் சுதந்திரம் எங்கள் துருவனுக்குத்தான் மனதை ஒருவழிநிறுத்தி யோசித்துப் பாரடா.

துரு. வ-ம்:—சகோதரர்களே! நீங்களேன் ஒருவருக்கொருவர் வாதிட்டுக்கொள்ளுகிறீர்கள் தம்பி உத்தமனுக்கு இருக்குஞ் சொந்தம் எனக்கும் இருக்கிறது இது சமயமே நானும் சென்று அரசர் மடிமீதமர்கின்றேன்.

உத். வ-ம்:—அண்ணா தாங்கள் வரவேண்டாம் மீறிவந்தால் என் தாயார் கோபிப்பாள்.

துரு. வ-ம்:—தம்பி உன் தாயார் கோபித்தாலென்ன அல்லது என் தாயார் கோபித்தாலென்ன இரண்டும் ஒன்றே எதற்கும் தந்தையின் மனக்கருத்தறியவும், நமது நண்பர்களின் சந்தேகம் நீங்கவும் நான் இன்று தர்பாருக்கு வருகிறேன் தடுக்காதே.

உத். வ-ம்:—ஆனால் நான் முன்னதாகச் செல்கிறேன் தாங்கள் சிறிது தாமதித்து வாருங்கள்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—11. **இடம்—தர்பார்.**

நடிகர்:—உத்தானபாதன், சுருசி, உத்தமன், துருவன், சபையோர்.

[அரசனும் சுருசியும் சிம்மாசனத்திருத்தல்]

உத்தானபாதன் பாட்டு

(சம்மன சுங்கள் பதங்கள் என்ற மெட்டு)

காதலியேநம்மருமைக் — கண்மணிஎங்கே
ஓதுவாயிப்போது — மைந்தன்உத்தமனெங்கே (கா)

பாலனைக்காணாமலென் — மனம்பதறுதே
சீலனெங்குசென்றானதை — செப்புவாய்மாதே (கா)

வ-ம்:—கண்ணே! எங்கே நம்மருமைக் குழந்தை உத்தமன் ஏனின்னும் வரவில்லை.

சுரு. வ-ம்:—நாதா! நானும் குழந்தையைக் காணாத விஷயமாகவே கவலை கொண்டிருக்கிறேன் விளையாட்டுப் பிள்ளைகளுடன் போய்விடுகிறான் வரும் நேரமானது.

[உத்தமன் வருகிறான் அரசனும் சுருசியும் அவனை வரவேற்று]

சுரு. வ-ம்:—என் கண்ணே! இந்நேரம் எங்கு சென்றிருந்தனை பால் பழஞ் சாப்பிட்டனையா?

உத். வ-ம்:—தாயே! இதுநேரம் விளையாடிவிட்டு போசன முடித்தே இங்கு வருகிறேன்.

[உத்தமன் அரசன் துடைமீது உட்காரத் துருவனும் வந்து சிம்மாதனப்படியேறி அரசன் மற்றொரு துடையிலமர்கிறான் சுருசி திடுக்கிட்டெழுந்து]

சுரு. வ-ம்:—ஆ! ஹா! இதென்ன அதிக்ரமம் இந்தச் சிறுவன் துருவன் ஒருவன் இவனது நிலைமை இன்னதென்றுணராமல் ஆனை யமருந் துடையின்மீது, பூனைவந் தமருவதுபோல் அஞ்சா நெஞ்சம் படைத்த வஞ்சகக்காரி அந்த சுநீதியின் மகனா அமர்வது அவ்வளவு அகங்காரமா இச்சிறு பயலுக்கு.

[துருவன் கையைப் பிடித் திழுத்துக் கீழே தள்ளி]

பாட்டு

(மதத்தினால் என்ற மெட்டு)

தகுமடா உனக்குத் தடிசிறுக்கிமகனே
தகுமடா கெட்டத் இடம்விட்டப்புறம்போடா (தகு)

அகங்காரமுடன்வந்தாய் அடடாகடடாசீசீ
அரசர்மடியிலேற அரசர்சிம்மாசனத் (தகு)

கழுதைக்குகந்ததுவோ கசடிபெற்றமகனே
கற்பூரவாசனை காலாலுதைப்பேனடா (தகு)

வ-ம்:—அடே கர்வம்பிடித்தக் கழுதையே அகங்காரங் கொண்ட அசடே ஆணவம்படைத்த அறிவிலியே மனத்துணிவாக என்ன காரியஞ்செய்தனை. அச்சம்பயமின்றி சிம்மாதனப் படிகடந்து வந்து அரசரின் மடிமீதமற யார்செய்த போதனையடாயிது. சீ சீ நாயே எழுந்து ஓடு.

[காலாலுதைக்கிறாள் துருவனெழுந்து அழுதுகொண்டே]

துருவன் பாட்டு.

(கமலவதனா கமலநயனா என்றமெட்டு)

தள்ளிப்பிடித்தென்னைத் தள்ளியுதைத்தனைக்
கிள்ளி யடித்தனளே (தள்)

வள்ளலென் தந்தைமுன்னே வைதனள்சின்ன அன்னை
வையக மீதிலென்னை (தள்)

பாலனென்றெண்ணாமலே பால்முகம் பாராமலே
பாவி யுதைத்தனளே (தள்)

துரு. வ-ம்:—தாயே! ஏனம்மா? உனக்கிவ்வித கோப மூண்டது. அவ்விதக் கோபம் வரும்படிக்கு இச்சிறியேன் ஒருவித குற்றமுஞ் செய்திலனே என் தம்பிக்கிருக்குஞ் சுதந்திரம் எனக்கில்லையா?

சுரு. வ-ம்:—அடே துருவா! ஆணவமாயிது "மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மரையிற் புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்" நீ அழுவதிற் சிறிதும் பயனில்லை, சிங்கக் குட்டியிருந்து விளையாடுமிடத்தில் நரிக்குட்டிக்கு என்னவேலை? முடவன் ஒருவன், நீண்டு வளர்ந்த மரத்தின் நுனிக்கிளையிற் கட்டப் பட்டுள்ள கொம்புத்தேனுக்கு இச்சித்தால் கிட்டுமோ? நீயோ என் சக்களத்தியின் வயிற்றிற் பிறந்தவன், ஆகையினால் இவ்வரசுரிமை யுனக்குக் கிடையாது நீ சிறுவனாகையால் உனக்கு இன்னமும் அறிவு தோன்றவில்லை.

துரு. வ-ம்:—துருவன் எனக்கா அறிவில்லை.

சுரு. வ-ம்:—பின்யாருக்கடா!

சுருசி பாட்டு

இராகம்-கமாஸ், தாளம் ஆதி.

பல்லவி

ஏடாகூடாமிது யேற்குமோபோய்வாநீ
எனதருமைமகனோ டமர்ந்திடவந்தவனக் (ஏ)

அநுபல்லவி

கேடுகெட்ட துஷ்ட தருதலைப்பயலே
கிருக்கென்ன முறுக்கென்ன கெருவம்படைத்தமூடா (ஏ)

சரணம்

நாடுவிட்டநாரி மகனுக்குச் சிறப்பா
நரிசிங்ககுகைபுகத் தகுமெனும் பொறுப்பா
வீடுவிட்டவோடு காலிக்கு மதிப்பா
விலகிநில்லடாயிது விடத்தைவிடடா அடா (ஏடா)

வ-ம்:—அடே அறிவற்ற துஷ்டப் பயலே! என்ன சொன்னாய்? சிறிதும் மனப்பயமின்றி, தரித்திரமே உருவாய்ப் பிறந்த உனது காலால் இச் சிம்மாதனத்தை மிதித்ததுமன்றி, அதிஷ்டசாலியாகிய உத்தமனுக்குச் சரியாய் அரசரது துடைமீ தமற வந்துவிட்டாயா. அடே மடையா! "நாய்க்குத் தக்குமா முழுத்

தேங்காய்" "குருடனுக்குண்டா ராஜவிழி" என்பது போலும், "பவிசுகெட்ட துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குச்சு" "கேடு கெட்ட நாய்க்கு ராஜபோகம்" எனப் பலருஞ் சொல்கிறபடி, உனக்கேனடா இந்தப் பேராசை. அடே துருவா! நீ இப் பாக்கியம் பெறுதற்கு அருகனாயிருந்தால் என் வயிற்றிற் பிறந்திருக்கவேண்டும். தரித்திரம்பிடித்த வெள்ளாட்டி வயிற்றிற் பிறந்த உனக்கேனிந்த அரசாங்க ஆசை; பேசாமலோடி விடடா.

துருவன் பாட்டு

(சேருங்கதியில் சேருவேனம்மா என்ற மெட்டு)

பல்லவி

அம்மாநீசும்மா கத்திப்பேசாதே அநியாயமாக
ஐயோவீணே யென்னை யேசாதே (அம்)

அநுபல்லவி

தம்மின்வரலாற்றைத் தானேதெரியாமல்
தன்னையெண்ணாமல் தகாதவாறாகவே (அம்)

சரணம்

இந்தஅரசும் சிம்மாசனமு முந்தன்
தந்தைதாய்ச் சொந்தமோ சொல்வீர்
மைந்தனென் தந்தைக்கு வந்தவுமக்கிந்த
வாய்மதமாகுமோ புல்வீர்
அந்தரங்கமான விந்தையறியாதென்
அன்னைதனைப்பேசி என்னைமிகயேசி (அம்)

வ-ம்:—அன்னையே! சிறிது நிதானியுங்கள். சிறுவனான என்னை இழுத்துத் தள்ளி உதைத்ததுமன்றி, தங்கள் மனம்போன போக்கின்படி பேசிவிட்டீர்கள். தாயே! என்னைப்பெற்ற மாதா அற்பச் சிறுக்கியாயின், அம் மாதை மணஞ் செய்துகொண்ட என் பிதா எப்பேர்ப்பட்டவரென்பதை எண்ணிப்பாரும். அந் தகைய அருமை பெருமையுடைய அரசருக்குத் தாங்கள் இளைய மனைவியாய் வாழ்க்கைப்பட்டீர்களே தாமெப்படிப்பட்டவரோ. இருக்கட்டும்; சிற்றன்னையே! இப் பெரிய அரசாங்க சிம்மாசனத்தைச் சீதனவரிசையாகத் தங்கள் பிதாவின் வீட்டிலிருந்து கொண்டுவந்தீர்களோ? அதனால்தான் என்னை இவ் விதம் உதைத்துத் தள்ளினீர்போலும். பாவம்! அப்பேர்ப்பட்ட உத்தம நற்காலில் ரத்தினக்கற்க ளணியக் கடவுள் கருணை புரியட்டும்.

சுரு. வ-ம்:—என்ன துடுக்கான வார்த்தை பேசுறது கொள்ளையிலே போறது(சிறிதுநின்று) அடே மடையா! இந்த ராஜாங்கமே எனது சீதனவரிசைதான்; இதிலுனக்குச் சொந்தமில்லை. அப்படிச் சொந்தம்பெற்று அரசர் மடிமீதேற உனக்கிஷ்டமிருக்குமாகில், ஸ்ரீ வைகுந்தவாசனாகிய நாராயணனை நோக்கித் தவம் செய்து அவரது கிருபைபெற்று என் வயிற்றிற் பிறந்து, அப் பாக்கியத்துக் காளாக முயற்சி செய்.

துரு. வ-ம்:—தாயே! காருண்யவதி! ஜெகன்மாதா! தர்மரூபி நான் உன் வயிற்றில் பிறக்கவும் வேண்டுமா.. இந்த ஜென்மம் ஏழு பிறப்பிலும் கேவலமான நாய் வயிற்றிற் பிறந்தாலுங் கடைத்தேறும். உனது புண்ணியம்பெற்ற வயிற்றிற் பிறந்தால் கோடி பாவம் உடனே சேரும். (அரசரைப் பார்த்து) மகா லக்ஷ்மி போன்ற மாதரசியை இளைய மனைவியாய்க் கலியாணம் செய்து கொண்டதினால் சுவாயம்புமநுவின் செங்கோல் முறைமை எப் படிஜொலிக்கிறது பாரும். தந்தையே! ஏன் தலை குனிந்துகொள் கிறீர். பேஷ்! வெகு நேர்த்தி உமது ராஜரீகம்.

[போகிறான் சபை கலைகிறது]

(சீன் முடிவு)

சீன்—12. **இடம்—சுநீதி குடிசை.**

நடிகர்:—சுநீதி, சுலோசனை, துருவன்.

சுநீதி. வ-ம்:—சகி! என்னருமைக்குழந்தை சிறுவன் வெளியே சென்றவன் இன்னம் வரக் காணவில்லையே. எங்கு சென்றிருப்பான் உம்; அறியாதவனாயிற்றே.

சுலோ. வ-ம்:—அம்மணி! சிறுவர்களுடன் விளையாடச் சென்றிருக்கும் கவலைப்படாதீர்கள் அதோ வருகின்றது நமது குழந்தைதான்.

சுநீதி. வ-ம்:—ஏன் இவ்வளவு அலங்கோலத்துடன் வருகின்றான் என்ன காரணமோ தெரியவில்லையே.

[துருவன் தேம்பித் தேம்பி அழுத வண்ணம் வந்து நிற்கிறான்]

சுநீதி. வ-ம்:—என் கண்ணே! ஏனப்பா இவ்வித ரோதனஞ் செய்கிறாய்? உனக்கு எவரால் எத்தீங் கேற்பட்டது.

துரு. வ-ம்:—அம்மா! அம்மா! (தேம்பித் தேம்பி அழுகிறான்)

சுநீதி. வ-ம்:—சொல்லப்பா; மகனே! சொல்லடா கண்ணே.

துரு. வ-ம்:—தாயே! நினைக்க நினைக்க என் நெஞ்சைப் பிளக்கின்றதே; ஐயோ! அம்மா! என்ன சொல்வேன்.

சுநீதி. வ-ம்:—கவலைப்படாதே சொல்வாய். நமக்குள்ள துயரை நாம்தானே அனுபவிக்க வேண்டும் அழாதே.

தர்க்கம்

(ஐயையோ நானொரு என்ற மெட்டு)

கண்ணிகள்

சுநீ. அப்பா மகனே யேனோ அழுதிங்கு வரலானாய்
ஆரடித்தா ருன்னையே கண்மணியே (அப்)

துரு. தப்பேதுஞ்செய்யாளென்னைத்தள்ளியுதைத்தாளன்னை
தம்பி வுத்தமன் முன்னே என் தாயே (தப்)

சுநீ. சின்னஅன்ன வுன்னையே
தெண்டிக்க வந்ததென்ன
செப்புவா எந்தன் முன்னே கண்மணியே (சின்)

துரு. என்னையே ஈன்றபிதா
இடத்தி லமர்ந்ததற்கே
இழுத்து வுதைத்தாளவள் என் தாயே (என்)

சுநீ. வ-ம்:—அடா என் கண்ணே, ஏனிப்படி யழுகிறாய்? நீ எங்கு சென்றிருந்தாய்? அங்கென்ன நடந்தது? உண்மையைச் சொல்.

துரு. வ-ம்:—தாயே நான் தம்பி உத்தமனுடன் விளையாடும்போது, உத்தமனது தோழருக்கும் என் தோழருக்கும் வாக்குவாதமிஞ்சி உத்தமனது தோழர்கள் என்னை அரசர் மடிமீதுட்கார யோக்யதை உண்டாவெனக் கேழ்க்க, எனக்குக் கோபம்பிறந்து தர்பாருக்குச் சென்று தந்தையின் மடிமீதமர்ந்தேன்.

சுநீ. வ-ம்:—தம்பி உத்தமன் எங்கிருந்தான்?

துரு. வ-ம்:—எனக்குமுன் அவன் தர்பாரணுகி தந்தையின் மடிமீதமர்ந்திருந்தான்.

சுநீ. வ-ம்:—பிறகு என்ன நடந்தது?

துரு. வ-ம்:—நான் அரசர் மடிமீதமர்ந்ததும் சிற்றன்னையார் என்னைப் பிடித்துக் கீழேதள்ளித் தன் காலால் உதைத்தது மன்றி, வெள்ளாட்டி மகனே, நாய்க்குக் கிட்டுமா முழுத்தேங்காய், குருடனுக்கு ராஜவிழியா, முடவனுக்குக் கொம்புத்தேனு கேடு கெட்ட நாய்க்கு ராஜபோகமா, பவுசு கெட்ட அடப்பத்திற்குப்

பட்டுக்குஞ்சமா, என்று பலவிதம் பேசிக் கன்னத்திலிடித்தது மன்றி, அடே துருவா! நீ அரசர் மடியிலமர வேண்டுமானால் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் துதித்து வரம்பெற்று, என் வயிற்றிற் பிறந்து அரசர் மடிமீதமருவாய் என்றனள்.

சுரு. வ-ம்:—அப்பா அழாதே, அன்னை அடித்தது பெரிதல்ல. என்னைத் திட்டியதற்கும் உன்னை அடித்ததற்கும் உன்பிதா ஒன்றுஞ் சொல்லவில்லையா?

துரு. வ-ம்:—அவரும் சிறியதாயார்க்குப் பயந்து என்னைப் பார்த்த வண்ணம் தலையைக்குனிந்து மௌனமா யிருந்துவிட்டார்.

சுநீ. வ-ம்:—போகட்டும், இதற்காகவா இவ்வித வருத்தமடைகிறாய் நீ விசனத்தைவிட்டுப் பாலன்னம் புசித்திளைப்பாறு.

துரு. வ-ம்:—என்னைத் திட்டியதற்கும் அடித்ததற்கும் என் மனம் வருந்தவில்லை. என் முன்னிலையில் தகாத வார்த்தையால் தங்களைத் திட்டினளே அதை நினைக்கவே துக்க மதிகரிக்கிறது.

சுநீ. வ-ம்:—குழந்தாய்! உலகையாளுஞ் சுதந்தரனாகிய உன்னைத் திட்டியவள், என்னை யேன் திட்டப்படாது. வாஸ்தவந்தானே அவள் சொன்னதுபோல் ஜெகத்ரட்சகனாகிய ஸ்ரீமந் நாராயணனை நோக்கித் தவம்செய்து அப்பாக்யவதி வயிற்றிற் புத்திரனாகப் பிறக்கப்படாதா. தாரித்திரியாகிய என் வயிற்றில்தானா பிறக்கவேண்டும்.

துரு. வ-ம்:—அம்மா! ஸ்ரீமந்நாராயணனை நோக்கித் தவம்செய்தால் நமக்கென்ன கிடைக்கும்.

சுநீ. வ-ம்:—அப்பகவானது தெரிசனங் கிடைத்தால் சமஸ்தபுவனங்களுங் கொண்டாடுஞ் சக்ரேஸ்வர ராகலாம்.

துரு. வ-ம்:—அம்மா! அப்பகவான் எங்கிருக்கின்றார்?

சுநீ. வ-ம்:—அவரில்லாத இடமொன்றில்லை. ஆயினும் அருந்தவம் செய்பவர்க்கே தரிசனங் கொடுப்பார்.

துரு. வ-ம்:—அம்மா! தவம் எங்கே செய்வது?

சுநீ. வ-ம்:—மனிதசஞ்சார மில்லாத கானகங்களிலும் மலைகளிலுமிருந்து தவமியற்றவேண்டும்.

துரு. வ-ம்:—தாயே தவமெப்படிச் செய்வது?

சுநீ. வ-ம்:—அப்பா! அன்னாகாரமின்றி ஐம்புலனை யொடுக்கி, மழை, காற்று, வெயில் முதலியவற்றைப் பொருட்படுத்தாது சதா பகவத் சிந்தையோடமர்ந்து தவம் புரியவேண்டும்.

துரு. வ-ம்:—அன்னையே! அப்படியானால் நானிப்போதே சென்று தவஞ்செய்து அப்பெருமானைக்கண்டு வரம்பெற்று வருகிறேன். உத்திரவு கொடுங்களம்மா.

சுநீ. வ-ம்:—(திடுக்கிட்டு) செல்வமே, உன்னால் தவஞ் செய்ய முடியுமா ஐயையோ சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை என்பதுபோல் என் வார்த்தையைத் திருப்பி வெகு சுலபமாகச் சொல்லி விட்டாய் இது வுன்னாலாகாதகாரியம் இவ் வெண்ணத்தை விட்டு விடப்பா.

தர்க்கம்

(மைடியர்கான்வருவாய்-என்ற மெட்டு)

பல்லவி

துரு. தாயேஎன்னைத் தடுக்காதேசும்மா
சேயன்நானே தவஞ் செய்துவாரேனம்மா (தா)

அநுபல்லவி

சுநீதி. மாயக்கானகத்தில் மகனேநீசெல்ல
ஞாயமல்லவாராய் நற்றவமணியேசிரராய் (மா)

பல்லவி

துரு. ஞாயமாகவே நவின்றீயிப்போது
ஆயதைத்தடுப்ப தாகாதாகாது (ஞா)

அநுபல்லவி

சுநீதி. ஆகாதுநீசெல்ல அன்னைநானுஞ்சொல்ல
போகாதிங்கிருப்பாய் புத்ரனேஎன்கண்மணியே (ஆ)

துரு. வ-ம்:—அன்னையே! இனி தாங்கள் என்னைத் தடுப்பதிற் பலனில்லை. சிறுவனென் றெண்ணவேண்டாம். எவ்விதத்தும் நான் தவஞ்செய்து அந்த நாராயணனது சேவைபெற்று வருகிறேன்.

சுநீதி. வ-ம்:—(சுலோசனையிடம்) தோழி! இதென்னடி தர்மசங்கடமாய் முடிந்தது. "பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்" என்னும் மூதுரை என்பால் சரியா யிருக்கிறது. குழந்தை பேசும் பிடிவாதத்தைக் கவனித்தாயா.

சுலோ. வ-ம்:—தேவி! சிறுவன் எதைத் தெரிவான். சிற்றன்னையின் கடுஞ்சொற்கள் அவனது மனதை துன்புறுத்தியது. எதுவோ சாந்தவார்த்தை சொல்லி வீட்டிற் கழைத்து வாருங்கள்.

சுநீதி. வ-ம்:—கண்ணே! ஆசிரமம் போகலாம் வா. இவ் விளவயதில் உனக்குத் தவஞ்செய்யும் பலன் கிடைக்காதப்பா.

துரு. வ-ம்:—அம்மா! தாங்கள் சொல்வது விந்தையாகவே தெரிகிறது. பக்தி செய்து பரமனது சேவையைக் காண்பதற்கு வயோதிகர்தானா உகந்தவர்கள் என்போன்ற பாலியர்களாலிக் காரியம் ஆகாதா? அன்னையே! அது விஷயத்தை கொஞ்சம் பரிசோதித்துப் பாருமே.

தர்க்கம்

(உத்தமகுணபரதா என்ற மெட்டு)

சுநீதி. உத்தமகுண துருவா—உன்னா
லுயர் தவஞ்செய்யலாகா அப்பா (உத்)

துருவ. உனதருளின் வாக்கினால்—நான்
உயர் தவஞ்செய்து வருவேன் (உன)

சுநீதி. உயர் தவஞ்செய்வதற்கு—மகனே
உற்றவர்எவரைக் கண்டாய் (உய)

துருவ. ஓதும்ஆதிமூலத்தை—நான்
உறுதிபாய்க்கண்டு வாரேன் (ஓது)

சுநீதி. உன்னைநானனுப்பிவிட்டு—என்
னுயிர் தரித்திருப்பேனோ தான் (உன்)

துருவ. அன்னையேயிதென்னவாது
ஆகாதுவிடை யளிப்பாய் (அன்)

சுநீதி. விடையுனக்களித்துவிட்டு—மன
வேதனைசகிப்பே னோடா (விடை)

துருவ. வேதனையுந்தீர்ந்திட—அந்த
விஷ்ணுவைக்கண்டு வாரேன் (வேத)

சுநீதி. வ-ம்:—மகனே! கானகமென்றால் சாமானியமா? அங்கே காடி, புலி, யானை, சிம்மம் என்று சொல்லக்கூடிய பலவித கோர மிருகங்கள் சஞ்சாரம் செய்யுமே. ஒவ்வொரு விஷநாகங்களைக் கண்டால் உன் மனந் திடுக்கிடுமே; குடிப்பதற்கு ஜலமுண்டா? காற்றும் படுக்க இடமுண்டா? அருந்த அறுசுவையுண்டா? அகோர மழையுங் கலந்தடிக்குஞ் சமயம் ஒதுங்க இடமுண்டா? அகோரமாக வீசுஞ் சூரிய வெப்பத்தைத் தாள உன்னாலாகுமா? அன்றியும், அரசாங்கத்தின் பட்டமகிஷிபட்டத்தையும், அரசாதுயும், அன்பையும் வெறுத்து நீயே துணையென நாடி நிற்கும் என் மன முன்னை அனுப்பத் துணியுமா? வேண்டாமடா என் செல்வமே! இவ்வெண்ணத்தை விட்டுவிடு.

துரு. வ-ம்:—தாயே! தாங்கள் என்ன சொன்னாலுஞ் சரி, அப் பகவானைக் காணா திங்கிருக்க என்மன மிசையாது. வீணிலென்

னைத் தடுப்பதிற் பலனில்லை. விசனத்தை விடுத்து விடை கொடுத் தனுப்புங்க ளம்மா.

சுநீதி. வ-ம்:—சகி சுலோசனா! இதற்கென்ன யோசனை. பரமானந் தன், கோபாலன் இருக்கினும் பாலனது மனதை மாற்றி விடு வார்கள். பாலும் வயிற்றுக்குப் படியமுது கொண்டுவரச் சென்றவர்கள் இன்னும் வரவில்லையே.

[சுநீதி சுலோசனையுடன் பேசிக்கொண் டிருக்குஞ் சமயம் துருவன் சுநீ தியை நமஸ்கரித்து ஓடிவிடுகிறான்]

சுலோ. வ-ம்:—அம்மா! தாங்கள் வருந்தவேண்டாம். அவர்களும் அரைநொடியில் வந்துவிடுவார்கள். அதுவரை குழந்தையிடம் சிறிது வார்த்தையாடிக்கொண் டிருங்கள்.

சுநீதி. வ-ம்:—(திரும்பிப் பார்த்து) அப்பா துருவா!

[துருவன் இல்லாதது கண்டு ஆவென்ற சப்தத்துடன் கீழ்விழுந்து]

சுநீதி பாட்டு

(திருக்கடையூரேன்பதிதுதானோ என்ற மெட்டு)

கண்ணிகள்

கண்ணேமணியே கானஞ்சென்றாயோ
என்னையித்துயருற விட்டாயோ (கண்)

கண்ணுனுந்தனைஎன்று காண்பேனோ
பெண்ணாய்ப்பிறந்தபல னிதுதானோ (கண்)

உன்னாலல்லவோவுயிர் வாழ்ந்திருந்தேன்
தன்னந்தனியாய்க்காட்டில் தாழ்ந்திருந்தேன் (கண்)

வ-ம்:—ஆ மகனே! இதுவுமென் தலைவிதியா. கண்மணி! இப்படியும் நீ என்னை மோசம் செய்யலாமா? இனி யாரை நம்பி உயிர் வாழ்வேனடா என் செல்வமே.

[தோழி சுலோசனை சுநீதியைத் தூக்கி உபசரித்து]

சுலோ. வ-ம்:—அம்மா! குழந்தை எங்கும்போ யிருக்கமாட்டான். விளையாட்டுக்காக இங்கெங்காவது பதுங்கி இருப்பான் தாங்கள் வருந்தவேண்டாம். வாருங்கள் போய்த் தேடிப் பார்ப்போம்,

சுநீதி பாட்டு

(யார்போய் சொல்லுவார் என்ற மெட்டு)

பல்லவி

எங்குபோய்த்தேடுவேன் என்னருமை மகனை (எங்)

அநுபல்லவி

இங்கென்னைப்பிரிந்தவன் எந்தவிடம்சென்றானோ
மங்கைநானிதற்கென் செய்வேனே-இன்றுநானே (எங்)

கன்றைப்பிரிந்தமான்போல் கலங்கிவருந்தலானேன்
என்றுஎன்மகன்முகங்காண்பேன்-இன்பம்பூண்பேன் (எங்)
[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—13. **இடம்—காடு.**

நடிகர்:—நாரதர், துருவன்.

துருவன் பாட்டு

(தாரரா பூஞ்சியா என்ற மெட்டு)

கண்ணிகள்

அங்குமிங்குந்தேடுறேன் ஐயனைக்கொண்டாடுறேன்
எங்கிருப்பானோகாணேன் எந்தவிதமுந்தோணேன் (அ)

மங்களசொரூபனை மாதவப்ரதாபனை
துங்கபத்மநாபனை சொல்லுந்திருமார்பனை (அ)

வ-ம்:—ஐயோ, பகவானை எங்கே பார்ப்பது எந்தயிடத்தில்தேடி யும் ஐயன் கிடைக்கவில்லையே தாய்வார்த்தை சரியாய் விட்டதே இக்காட்டைக்காண மனங்கலங்குகிறதே வயிற்றிற் பசி அதிக மாகிறதே எதைச் சாப்பிடுவது இக்காட்டில் காய்கனி ஒன்றுந் தென்படவில்லையே ஜலமருந்தத் தடாகத்தையுங் காணோமே என்செய்வது.

[விசனித்து நிற்கிறான் நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்]

நாரதர் பாட்டு

இராகம்-கமாஸ், ஆதி தாளம்.

பல்லவி

சாம்பசதாசிவப்பரம்பொருளே சரணசெதியருளே (சா)

அநுபல்லவி

பாம்பணிந்தே தாங்கும் பராபரச்சுடரே
பாதசேவை தருவாய் அரஹரஹர (சா)

சரணம்

சோமசுந்தர தர சுஜனக்ருபாகர
சுருதிமுடிவிலுறை சுயம்ப்ரகாசசிவ (சா)

சுரு. வ-ம்:—ஆ! ஹா! இக்கொடிய கானகத்தில் வேணுகானத்துடன் பகவானது பக்திப்பஜனம் பாடிக்கொண்டு ஓர் தவசியார் வருகிறார் அநாதரவற்ற நமக்கு ஆதரவளிக்கக் கடவுளே அவரை யிங்கனுப்பி யிருக்கவேண்டும் எதற்கும் நாமே நேரில் சென்றவரைக் காணலாம்.

[துருவன் நாரதரைச் சந்தித்துக் காலில் விழுந்து பணிந்து]

துரு. வ-ம்:—சுவாமி! அடியேன் நமஸ்கரிக்கிறேன்

நார. வ-ம்:—ஆசீர்வாதம் குழந்தாய் எழுந்திரப்பா

[துருவன் எழுந்து பக்தி வினயத்துடன் நின்று]

துரு. வ-ம்:—சுவாமி! ஸ்ரீமந்நாராயண மூர்த்தி எங்கே யிருக்கின்றார் தங்களுக்குத் தெரியுமா? [நாரதர் தனியாக]

நார. வ-ம்:—ஆ! ஹா! இக்குழந்தையைக்காண ராஜ வசீகரம் நன்கு விளங்குகிறது. மதலைமொழி மாறாத இவ்விளம் பிராயத்தில் இக்கொடிய காட்டிற்கிவன் வரவேண்டிய காரணமென்ன? அன்றியும், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி எங்கே யிருக்கிறாரென்று கேட்கிறான். இவன் வரலாற்றை விசாரித்தறிவோம் (துருவனைப் பார்த்து) அப்பா, நீ கேட்கக்கூடிய பரமாத்மாவானவர் எங்குமிருக்கிறார். அதன் விவரம் பின்சொல்கிறேன். தற்சமயம் இக்கொடிய காட்டில் வந்த நீ யாரப்பா.

பாட்டு

(அதிகசுரதநய சரசிநீயாரம்மா என்ற மெட்டு)

பல்லவி

அதிகமதலைமொழி சிறுவநீயாரப்பா
அறைகுவாய் நீ இப்போ (அ)

அநுபல்லவி

அதிகமதலைமொழி சிறுவநீயாரோ
அற்புதமிக்க வுனக்கென்ன பேரோ (அ)

சரணம்

தனையனுன துடைய தாய் தந்தையாரோ
தானிங்குவரவேதோ சொல்லுவாய்நல்ல
விநயகுணமுடைய நீஎந்தஊரோ
விசனமுங்கொளல்யாதோ விநோதமான
மனமிகவாடிநீ வருவதுமேனோ
வருத்தம்விடுத்து எடுத்துவுரைப்பாய் (அ)

வ-ம்:—குழந்தாய்! நீ யார்? உன்னைப் பெற்ற மாதா பிதாக்கள் யாவர்? நீ பிறந்து வளர்ந்த நகரம் யாது? தவிற உனது தாய் தந்தை பந்துமித்திரர் சொந்தவூரை விடுத்து இங்கு வரவேண்டிய காரணமென்ன? உண்மையை ஒளிக்காமல் விவரமாகச் சொல்; கேட்கலாம்.

துரு. வ-ம்:—சுவாமி! எனது வரலாற்றைச் சொல்லத் தடையில்லை; சிறியேன்மீது சினமின்றித் தாங்கள் யாரென்பதை முதலாவது தெரிவிக்கக் கோருகிறேன்.

[நாரதர் சிரித்துத் தலையசைத்துக்கொண்டு]

நார. வ-ம்:—அப்பா! எல்லோரும் என்னை நாரத மகாத்மாவென்றழைப்பார்கள்.

துரு. வ-ம்:—(பணிந்து) சுவாமி கிருதார்த்தனானேன். இனி என் வரலாற்றைச் சொல்கிறேன் கவனியுங்கள்.

துருவன் பாட்டு

(மார்கழிமாதம் திருவாதிரை என்ற மெட்டு)

கண்ணிகள்

நாரதமகருஷியே என் சரிதைதன்னை
நலமாய்க் கேட்டருள்வீர்
பார்புகழ்பாலனேன் பான்மைதனைத்தெரிந்து
பாபத்தைத் தீர்த்திடுவீர் (நார)

உத்தானபாதன் புத்திரனெனக்
குற்றபெயர் துருவன்
சிற்றன்னையார்செய்த செய்கைசகியாது
சேர்ந்தேனிங்கு சிறுவன் (நார)

வ-ம்:—தபோநிதியே! சுவாயம்புமனு குமாரராகிய உத்தான பாத மகாராஜ புத்திரன் நான். என் பெயர் துருவன். என் தாய் பெயர் சுநீதி. என் பிதாவிற்கு இளையதாரமாய் வந்த சிற்றன்னை சுருசியம்மனின் விரோதத்தால் இக்காட்டிற்கு வரலானேன்.

நா. வ-ம்:—உத்தமியாகிய சுருசி உனக்கென்ன குறைசெய்தாள்.

துரு. வ-ம்:—சுவாமி! பூரண கர்ப்பிணியாயிருந்த என் தாய் சுநீதியைக் காட்டிற் கனுப்பினள். காட்டிற் பிரசவமாகி வளர்ந்த நான் தம்பி உத்தமனுடன் தர்பாரணுகி தந்தையின் மடிமீதமர, என்னைக் கீழேதள்ளி யுதைத்தாள்.

நா. வ-ம்:—ஐயோ பாவம்! பிறகு நடந்ததென்ன?

துரு. வ-ம்:—அந்தக் கோபத்தினால் ஸ்ரீமந் நாராயணனை நோக்கித் தவம் புரிந்து என் தாய்க்கும் எனக்கும் நற்சுகம் கிடைக்க வரம்பெற் றேகவந்தேன்.

நா. வ-ம்:—அப்படியா சமாச்சாரம்; நல்லது. சுநீதி வயிற்றிலுதித்த துருவனா நீ.

துரு. வ-ம்:—ஆம்; சுவாமி.

நா. வ-ம்:—ஆம்; நான் கொடுத்த மாம்பழக்கொட்டை பழுதாகுமா? இருக்கட்டும்; இப்போதென்னாலுனக் காகவேண்டியதென்ன?

துரு. வ-ம்:—தவஞ் செய்வதற்கேற்ற இடத்தைக் காட்டுவதுடன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைப் பாராயணஞ் செய்யும் மந்திரத்தையும் உபதேசிக்கவேண்டும்.

நா. வ-ம்:—துருவா! உன்னிஷ்டப்படியே சொல்கிறேன் கவனி.

நாரதர் பாட்டு

(மனந்தேறுவாய் என்ற மெட்டு)

பல்லவி

சொல்லக்கேளடா—துருவா சிறுவா (சொ)

அநுபல்லவி

நல்லசுகமளிக்குமந்த்ரம்—திரு
நாரணனிலகியமந்த்ரம்—நம்மை
அல்லும்பகலுங்காக்குமந்த்ரம்
அஷ்டாக்ஷரமந்த்ரசுதந்த்ரம் (சொ)

[துருவனது காதிலுபதேசித்து]

நா. வ-ம்:—துருவா! இம்மஹா மந்திரத்தை பஞ்சபூதத் திருப்தியாய் துதிப்பாயாகில் ஸ்ரீமந் நாராயணன் சேவை கிடைக்கும். இக்கானக மார்க்கமாகவே செல்வாயாகில் இன்னுஞ் சில மகருஷிகளைக் காணலாம். அவர்களைத் தெரிசித்துச் சிறிதுதூரம் போவாயாகில் அழகிய மதுவனந் தோன்றும். அவ்வனமே

உன் தவசுக்குகந்தது. உன் எண்ணம் ஈடேறும். சென்று வா; இன்னொருமுறை உன்னை சந்திக்கிறேன்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—14. இடம்—தர்பார்.

நடிகர்:—உத்தானபாதன், சுருசி, குடிகள், ஞானாசிரியர்.

[அரசன் சுருசியுடன் சிம்மாசனத் திருக்கக்கண்டு]

குடி. வ-ம்:—அரசே! நமஸ்காரம்.

உத். வ-ம்:—வரவேண்டும்; பிரஜைகாள்! என்னகாரணம் எதற்காக இங்கு வந்தீர்கள்.

குடிகள் பாட்டு

(அருமைக் கண்மணியை என்ற மெட்டு)

பல்லவி

மஹா-ராஜப்ரதாப கெம்பீரா
இது-ஞாயமாமோ சுகுமாரா (மஹா)

அநுபல்லவி

தேசப்ரகாசசுசீலா எங்கள்
சிந்தைக்கிசைந்தபூபாலா நாங்கள்
பேசுமோர்வார்த்தையைக்கேளாய் நல்ல
பேர்பெற்றமாமலர்த்தோளா (மஹா)

சரணம்

அன்னையெனும்ராணிசுநீதி அவள்
தன்னைவெறுத்ததநீதி சொந்த
மென்னுந்துருவன்பிரக்யாதி சொல்ல
இன்னமுங்கேளுமோர்சேதி (மஹா)

[illegible]ம்:—ராஜப்ரபு; இதென்ன அநீதி. இதுவோ தமது செங்கோல் முறைமை. அரசே! பட்ட மகிஷியாகிய சுநீதியம்மையைக் காட்டில் சிறைவைக்க நேர்ந்த காரணம் யாதோ? இளவரசனை துருவனைக் கீழேதள்ளி உதைத்து தர்பாரைவிட் டகற்றிய விவரமென்னமோ ராஜே, இளவரசன் பட்டபுதேவியின் புத்திரன் சகல சுதந்தரத்தையும் வெறுத்து தாய் வார்த்தையை மறுத்துக் காடே கெதியென சென்றுவிட்டானாமே. தரும தேவதையும் ராஜ்ய லக்ஷ்மியும் அவன் பின்னன்றோ போகின்

றது. வேந்தே! சுவாயம்பு மநுவின் செங்கோல் முறைமைக்கிது அழகல்ல; குடிகளாகிய எங்களுக்குத் தாங்கள்தானே தாய் தந்தை. எங்கள் வார்த்தையைக் கேட்டு இப்பொழுதே எங்களுடன் வந்து துருவ சநீதியம்மையாரைக் கூட்டி வந்து அரண்மனையில் வையுங்கள். இலதேல், நாங்கள் சகலரும் இவ்விராச்சியத்தை விட்டுப் போவதற்குச் சித்தமாயிருக்கிறோம்.

சுருசி. வ-ம்:—ஓஹோ! வெகு நன்றாயிருக்கிறது ராஜநீதி. நீங்கள் தானா அரசருக்குப் புத்தி போதிப்பவர்கள். இது யார் செய்த போதனை. அந்தச் சிறுக்கி சுநீதியின் உபதேசமா?

குடி. வ-ம்:—அம்மணி! ஒரு பாவமுமறியாத அவ்வம்மையைப் பழிக்கவேண்டாம். அந்தம்மாள் காட்டுக்குப் போனதுமுதல் இன்றுவரை நாங்கள் அந்தம்மாளைப் பார்க்கவேயில்லை. விஷயங்களை கேழ்விப்பட்டே இங்குவந்து விண்ணப்பித்தோம்.

உத்தா. வ-ம்:—பிரஜைகாள்! இது விஷயத்தில் உங்களுக்குக் கவலை வேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும் நீங்கள் சுகமே செல்லுங்கள்.

குடி. வ-ம்:—மகாராஜா! தங்களுத்திரவை மீறமாட்டோம். இருக்கினும் நியாயம் அநியாயம் என்பதைப் பகுத்தறிந்து நடக்க வேண்டுமென்பதே சுவாயம்புமநுவின் கட்டளை. அதன்படி தங்களைக் கேட்டோம். தாங்கள் நியாயவரம்பு மீறியதால் இதோ நாங்கள் போகிறோம். எங்கள் இளைய மகாராஜா துருவச் சக்ரவர்த்தியார் வசிக்கும் காடே எங்களுக்கு வீடாகும். தாங்கள் சுகமே யிருங்கள்.

[குடிஜனங்கள் போகின்றனர்.
ஞானசிரியர் வருகிறார்]

ஞான. வ-ம்:—பிரஜைகாள் சிறிது பொறுங்கள். தர்பாரைநாடி நீங்கள் வந்த விவரமென்ன? வாடிய முகத்துடன் செல்லுங் காரணமென்ன.

குடி. வ-ம்:—சுவாமி! நடந்தவிஷயம் யாவும் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

ஞான. வ-ம்:—ஆம்; தெரிந்தே இங்கு வந்தேன்.

குடி. வ-ம்:—மகாராணியாரையும், இளவரசரையுங் கூட்டிவரும்படி முறையிட்டோம். அரசர்பெருமான் எங்களை விரட்டுகின்றார். வெளியேறுகின்றோம்.

ஞான. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம். பேஷ் வெகு நன்றாயிருக்கிறது அரசனது புத்தி. ஹே ராஜன்! இதுவோ உனது

அரசாக்ஷி! இதென்ன காமாந்தகாரம். உத்தம பத்தினியாகிய சுநீதி காட்டின்குடிசையில் வசிக்கவும், யுவராஜ்ய பட்டாபிஷேகப் பாலகன் காடு செல்லவும், இளைய மனைவியுடன் அதிலும் கபடமே வுருவாய்வந்த இச் சுருசியுடன் நீ சிம்மாசனத்தமர்ந்து, ஊரில் வசிக்குங் குடிகளையும் ஊரைவிட்டேக உத்திரவு கொடுப்பது தகுதியோ.

பாட்டு

(வேதமனுத்தஜாவ் என்ற மெட்டு)

கண்ணிகள்

அரசனேவுன் மநுமுறை — யிதுதானோ
அட்டாவுனக்கிம்மதிவந்தது — மேனோ
தாரணிதனக்குகந்த — தனையனைப்பிரிந்து
தானாசாண்டிடவேமனந் — துணிந்து (அர)

பட்டபுதேவியைக் — கஷ்டமடையச்செய்து
பாவையின்மோகத்தால் — கேவலனாய்
இட்டமுடனிப்படி — யிருந்திடிலினிமே
லேதுயரடைவாய் — தானிதுதெரிவாய் (அர)

வ-ம்:—அரசனே! இதுவோ உனது யோக்யதை; நான் சொல்வதென்ன அதைச் செவியிலேற்காது உனது ஞானசிரியனென்றுமென்னைக் கவனியாது நீ சிம்மாதனத்திருக்குங் கெருவமென்ன. 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதை மறந்தாயல்லவா? இவ்வளவிற்குங்காரணம் எமகாதகியாகி இளைய மனைவி சுருசியின் துற்போதனையாயிது. சரி; இதோ காட்டுகிறேன் இளையவளின் இன்பப் பெருக்கை.

[கமண்டல ஜலத்தை எடுத்து வீசுகிறார் உத்தானபாதன் உடனே சிம்மாசனத்திருந்து இறங்கி ஞானசிரியர் காலில் விழுந்து]

உத்தானபாதன் பாட்டு

(பாதுகையே பாதுகையே என்ற மெட்டு)

பல்லவி

குருநாதா — குருநாதா
கோபமிலாதெனைப் — பாதுகாப்பீரையா (குரு)

அநுபல்லவி

திருவருள்பெருகிய — தேவசகாயா
தீனனென்குறைதவிர்த் — தாளுமுபாயா (குரு)

சரணம்

சிறுவனென்மனத்துயர் தீர்த்திடவேணும்
சித்த:பிரங்கிளனே யாட்கொளவேணும்
துருவசுநீதியை யழைத்திடவேணும்
துணையிருந்தடிமையைக் காத்திடவேணும் (குரு)

வ-ம்:—சுவாமி! க்ஷமிக்கவேண்டும். எனது பூர்வ வினைப்பயனோ, அல்லதென் விதியின் சதியோ வேறெதுவோ தெரியேன். இப்பாவியை மணஞ்செய்து இவளது மையலிற் கட்டுண்டு நான் மறுமுறை மாறிய தன்மையே. இக்குற்றத்தைத் தாங்கள் பொறுத்து மேல் நடக்கவேண்டியவற்றிற்கு அநுக்ரகிக்கவேண்டும் ஐயனே.

ஞா. வ-ம்:—சரி எல்லாம் வினையின்படி நடந்தேறிவிட்டது. இப்பிரஜைகளுடனே இந்தக்ஷணமே காட்டிற்கணுகி சுநீதியையும், துருவனையும் நாட்டிற்கழைத்துவந்து நலமுடனிருக்கவேண்டும்.

உத்தா. வ-ம்:—இதோ போகிறேன். குடிமகாஜனங்காள்! நீங்களும் என்னுடன் வாருங்கள்.

[அரசனும், ஞானாசிரியரும், குடிஜனங்களும் போகின்றனர். சுருசி சிம்மாதனம்விட் டிறங்கி]

சுரு. வ-ம்:—ஐயோ! இப்பாழுங் கிழட்டுப்பிணம் இங்கேன் வந்தது. இதுவரை நான் பட்ட கஷ்டமெல்லாம் நஷ்டமாகும்படி அரசருக்கு நற்புத்தி புகட்டி அழைத்துப்போய் விட்டதே. எவ்விதத்தும் அரசர் சுநீதி துருவனை, அழைத்துவருவாரென்பதுண்மை. இனிமேலென்கெதி என்னவாகிறது. (யோசித்து)

சுருசி பாட்டு

(வருகலாமோ என்ற மெட்டு)

பல்லவி

என்பிறந்தேன் பாவி நானேயாரும்
இகழும்பெண்ணாயிந்தப் புவிதனிலேவந்து (ஏன்)

அநுபல்லவி

மானிலத்தோரென்னை யேசவே—அந்த
மங்கைசுநீதியைப் பேசவே—யாரு
மதியாவிதமே புவிமீதிலேவந்து (ஏன்)

சரணம்

கொண்டஎன்னெண்ணங்கைகூடாது—வந்த
குருவெனுமொரு பாவிசெய்சூது
கொடிதாகிய பேருாவேபுவிமீ (தேன்)
[போகிறாள்]

(சீன் முடிவு)

சீன்—15. இடம்—காடு குடிசை.

நடிகர்:—உத்தானபாதன், சுநீதி, குடிஜனங்கள், பரமானந்தன், கோபாலன், சுலோசனை.

[உத்தானபாதன் பிரஜைகளுடன் வரக்கண்ட பரமானந்தன் குடிசையருகிற் சென்று]

பர. வ-ம்:—அம்மா அம்மா, நமது மஹா ராஜா தங்களை யழைத்துப் போக வருகிறார்.

[சுநீதி சுலோசனையுடன் வெளிவரவும் உத்தானபாதன் வருகிறான்]

சுநீ. வ-ம்:—(அரசன் காலில் விழுந்து) நாதா நமஸ்காரம் ஏனித்தனை தூரம் கால்நடையாக வந்தீர்கள்.

உத். வ-ம்:—நாயகி, உன்னருமையை யுணராது நானுனக்குச் செய்த குற்றத்திற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

சுநீ. வ-ம்:—பிராணேசா, தாங்கள் என் வகையிலெவ்வித குற்றமுஞ் செய்யாதிருக்க இவ்விதம் புகல்வது தருமமல்லவே.

உத். வ-ம்:—நல்லது உடனே துருவனை யழைத்துக்கொண்டு உன் அரண்மனைக்கு வரவேண்டும். துருவனுக்கு யுவராஜ பட்டாபிஷேக முடிக்கவேண்டும்.

[உத்தமன் வருகிறான் உத்தானபாதன் அவனைப் பார்த்து]

[illegible]ா. வ-ம்:—அடே ஆணவம் பிடித்த அசட்டுச் சிறுக்கிமகனே இங்கேனடா வந்தாய் போயிங்கு நில்லாதே.

உத். வ-ம்:—பிதா நான் எனதண்ணாவையும் என் பெரிய தாயாரையும் அழைத்துப் போகவே இங்கு வந்தேன்.

சுநீ. வ-ம்:—நாயகா! வீணிலேன் குழந்தையைக் கோபிக்கின்றீர்கள். இவனன்றோ என்னருமைக் குழந்தை ஐயோ இவனைக் கோபித்தால் இவனும் அவனைப்போல் ஓடிவிடுவான் (உத்தமனைத்தூக்கி யணைத்து) என்கண்ணே [முத்தமிடுகிறாள்]

உத்தா. வ-ம்:—குழந்தை துருவன் எங்கே போனான்.

சுலோ. வ-ம்:—தவஞ்செய்து வருகிறேன் என்று தாய்வார்த்தையைத் தடுத்துக் காட்டிற் கோடிவிட்டான்.

[உத்தானபாதன் மயங்கி நிற்கிறான்]

கோபா. வ-ம்:—மஹாராஜா! இதற்காகத் தாங்கள் கவலை யடைய வேண்டாம். இப்போது சென்று தேடுவோமாகில் எப்படியும் துருவனை யழைத்துவரலாம்.

குடி. வ-ம்:—மஹாராஜா வாருங்கள் போகலாம். துருவன் வேறெங்கும் போயிருக்கமாட்டான். சமீபத்தில் நமக்குத் தென்படுவான் அழைத்துவாலாம் வாருங்கள். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—16. **இடம்—கானகம்.**

நடிகர்:—துருவன், உத்தானபாதன், சுநீதி, பரமானந்தன் முதலியோர்.

[துருவன் ஓரிடத்திற் படுத்திருக்கக் கண்ட பிரஜைகள்]

பிர. வ-ம்:—மஹாராஜா! மஹாராஜா! இதோ இருக்கிறது நமது குழந்தை.

[உத்தானபாதன் துருவனிடம் சென்றெழுப்பத் துருவ னெழுந்து]

துரு. வ-ம்:—தந்தையே! தாயே! நமஸ்காரம். குடி மகா ஜனங்காள் எல்லோரும் வாருங்கள். ஏது இத்தனை தூரம் அனைவரும் வந்தது?

உத். வ-ம்:—என்னற்றவப்பயனு லுதித்த மகனே! நான் அறியாச் சிறுவனாகிய உன்னைக் கவனியாது செய்த குற்றங்களைப் பொறுத்து எம்முடன்,

பாட்டு

(வாவா கார்த்திகா என்றமெட்டு)

வா வா பாலகா—வர
வழைத்திட வனமிதி லடுத்தன மிதுதகி (வா)
ஆமிது கோம் ஆன விசாரம்
அதையே மன மெண்ணாது
சுக மளிக்கவே முடி தரிக்கவே நகர் (வா)
தந்தைசொல் வாக்யம் மந்த்ரமுன் யோக்யம்
தனையே வுல கறிந்தது
முடி தரிக்கவே பிழை பொறுக்கவே நகர் (வா)

வ-ம்:—கண்ணே துருவா! சண்டாளியாகிய சுருசியால் விளைந்த விபரீதத்தை மனதிலெண்ணாது, எம்முடன் நகர் வரவேண்டுகின்றேன்.

துரு. வ-ம்:—பிதா! இதென்ன தங்கள் வார்த்தை விபரீதமா யிருக்கிறதே. கேவலம் ஓர் அற்ப வெள்ளாட்டியின் மகனாகிய என்னை யேன் தாங்கள் தேடி வரவேண்டும். வெள்ளாட்டியாகிய சுநீதியம்மாள் தங்களுடன் வருவானேன். ஓஹோ! கணவரென்ற பாசத்தால் உடன்வந்தனர் போலும்.

உத். வ-ம்:—சுநீதி! குழந்தை பேசுவதைப் பார்த்தாயா? பேஷ்! எனக்கு நல்ல புத்தி கற்பித்தான்.

சுநீ. வ-ம்:—நாதா! அறியாதவன் தானே அவனுக்கென்ன தெரியும்; வத்ஸா துருவா தந்தை வார்த்தையைத் தடுக்காது சொந்த நகரம் போகலாம் வா.

துரு. வ-ம்:—அம்மணி! என்மேற் கோபம் வேண்டாம்; தாயாகிய சுருசியம்மாள் வார்த்தையை நான் தட்டலாகாது. ஆகவே,

துருவன் பாட்டு

(ஈசனே துணைசெய்வாய் என்ற மெட்டு)

கண்ணிகள்

தந்தையேஎன் வந்தனம் தனயன்சொல்லைக்கேள்முனம்
விந்தைசேர் தபோவனம் வேண்டுவேண்டுமித்தினம் (தந்)

சின்னத்தாயின் ஞாயமே சேயனென் சகாயமே
சொன்னசொல்லுபாயமே தோணுஞ்சம்ப்ரதாயமே (தந்)

வ-ம்:—தந்தையே! எனது சிற்றன்னையான சுருசியம்மாள் சொல்லிய கடுஞ் சொற்களானது எனது நெஞ்சைப் பிளந்து நிற்கிறது. அதை ஒன்றுசேர்த்து வைப்பதற்கு ஸ்ரீமந் நாராயணனன்றி வேறெவராலு மாகாது; ஆகவே, எவ்விதத்தும் நானப்பகவானது பாதசேவையைப் பார்த்தபிறகே நகரணுகுவேன்; தாங்கள் சந்தோஷமாக எனக்கு விடைகொடுத் தனுப்புங்கள்.

உத்தானபாதன் பாட்டு

(மாதவங்கள் செய்துபெற்ற என்ற மெட்டு)

கண்ணிகள்

தந்தைதாய் துயரந்தீர்த்த தனயனே வாடாசெந்தேனே
விந்தைசேர் தவமியற்ற வேளையல்லடா மகனே (தந்)

கானக தவம்நீசெய்ய காலமல்லவே யீதையா
ஆனதால் செல்வதாகாது அப்பனே என்சொல்தள்ளாது (தக)

வசி:—கண்மணி துருவா! இனி, என் வார்த்தையைத் தடுக்காதே. உன்னிமித்தம் நமது குரு சுவாமியால் எனக்கு நல்லறிவு தோன்றியது.

சுநீ. வ-ம்:—வத்ஸா! இன்னமும் பிடிவாதம் வேண்டாம்; நகரின் குடிஜனங்கள் பலரும் உனது நலத்தைக் கோரியே வந்திருக்கின்றனர்; வா போகலாம்.

குடி. வ-ம்:—இளவரசே! எதுவோ காலவிதியால் விளைந்ததை மனதிற் கருதாது எங்கள் முகத்தையாவது பார்த்து இல்லமணுக வேண்டுகிறோம்.

துரு. வ-ம்:—பிரஜைகாள்! என்னரண்மனைக்கு நான் வருவதற்கு உங்களது சிபார்சு தேவையில்லையே. இன்னும் நான் சொல்வதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். தந்தையே தாம்,

துருவன் பாட்டு

(சிற்றப்பாவிட்டிடுவோய் என்ற மெட்டு)

பல்லவி

ஏனேவீண் துயரங்கொண்டீர்
ஏற்குமோயிது எந்தன் தந்தையே (ஏ)

அநுபல்லவி

நானினிநகரணுகேன் நாடிடாமலேசெல்லுவீர்
ஆனவினைதானிதுவே அரன்செயலாம்
எந்தன் தந்தையே (ஏ)

சரணம்

பகவானைபார்க்காமலே பாவமதைத்தீர்க்காமலே
நகரணுகேனுண்மையாய் நம்புவீரையா
எந்தன் தந்தையே (ஏ)

வ-ம்:—பிதா! தமக்கேனிந்தக் கவலை. ஐயா உத்தம க்ஷத்திரியராகிய சுவாயம்பு மநுவின் மரபிலுதித்த நான் முன்வைத்த காலைப் பின்வைப்பேனோ? தந்தையே! கரைபுரண்ட வெள்ளந் திரும்புமா? கரிவாயிற் சிக்கிய கரும்பு மீளுமா? ஒரே வார்த்தை; இவ்வுடலழியினுஞ் சரி; என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யாது எடுத்தடி வைக்கமாட்டேன். இது சத்தியம்; இது விஷயத்தில் மனக்கவலையின்றித் தாங்கள் செல்லும்படித் தாய் தந்தையாகிய தங்களது பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்,

பிரஜைகளே! உங்களது வார்த்தையைத் தடுத்தேனென்ற கோபம் வேண்டாம்; தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. என்பதுபோல், என் தாயாகிய சுருசியம்மாளின் வார்த்தையின்படி நான் தவமியற்றி ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்தபிறகே நகரணுகுவேன். நீங்கள் யாவரும் சந்தோஷமாகச் செல்லுங்கள்.

[துருவன் விரைந்து போகிறான்.
சகலரும் பிரமித்து நிற்கின்றனர்]

உத்தானபாதன் பாட்டு

(பாரோர்நின்னுபாசிநாகாரி என்ற மெட்டு)

கண்ணிகள்

மைந்தாஎம்மை வெறுக்கநீயும்
உன் தாய்நானும் செய்தபாக்கியம்
எந்தவிடம் சென்றாயோபாலா
ஆ ஆ ஆ ஆ சீலா (மைந்)

மனமுங்கலங்க மதியுந்தயங்க
எனையும்விடுத்து இதயந்துடித்து
வனமதிலெங்கு சென்றாயோபாலா
ஆ ஆ ஆ ஆ சீலா (மைந்)
(போகின்றனர்)

(சீன் முடிவு)

சீன்—17. **இடம்—கானகம்.**

நடிகர்:—துருவன்.

[துருவன் கானக மத்தியில்
திரிந்தலைந்து வருகிறான்]

துருவன் விருத்தம்

...ொடு கழுகலகை நாய்நரிகள் சுற்றிசோறிடு துருத்தியை
...ண்டு நவவாசல் பெற்றுவளர் காமவேள் நடனசாலையை
...வாசை முறியிட்ட பெட்டியை முமலமிகுந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமிதத்து கும்பியை முடங்கலார் கிடைசரக்கினை

மாகவிக்ரதனு மின்னை யொத்திலகு வேதமோதிய குலாலனா்
வனைய வெய்யதடி காரணையமன் வந்தடிக்கு மொருமட்கலத்
தேகமான பொய்யை மெய்யெனக்கருதி ஐயவைய்ய மிசைவாடவோ
தெரிவதற்கரிய பிரமமே அமல சிற்சு கோதய விலாசமே,

வ-ம்:—நமது தேகமானது ஒரு மண்பாண்டத்தை யொத்து விளங்குகின்றது. ஆகையினால் அது எப்போதாகிலும் ஒருபோது அழிந்து விடக்கூடியது. எனினும் அப்படிப்பட்ட உடலை நம்பி, மக்கள் இவ்வுலகத்தில் உள்ள வரையில் தம்முடைய மனம் போனவாறு நடக்க ஆரம்பிக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது வெறுக்கத் தகுந்த காரியமேயாகும் உயிர்கள் எடுக்கும் பிறவிகள் எல்லாவற்றிலும் மானிடப் பிறவியே சிறந்தது அதைப் பெற்ற மாந்தர் உடனே தாம் தேடிக் கொள்ளவேண்டிய வழியை மிகவும் தீவிரமாகத் தேடிக்கொள்ள வேண்டும். விதை விதைக்கும் நாட்களில் வீட்டில் உறங்கிவிட்டு, அறுப்பு அறுக்கும் நாட்களில் அறிவாள் கொண்டு போகிறவனுக்கு ஒன்றும் கிடைக்காதல்லவா? அதுபோல நாம் நம்முடைய வாழ்நாட்களை வீணிற்கழித்து விட்டுக் கடைசியில் வருந்துவதனாற் பயனில்லை. மானிட தேகத்தின் உதவியைக்கொண்டு நாம் நல்வழியில் முயல்வோமானால் பிறப்பு, இறப்பாகிய கடல்களைக் கடப்பதற்குத் தேகமே தகுந்த புணையாகும் மக்களுடைய முயற்சியே அந்தப் புணையை வேகமாக மோதும் அலைகளை யெதிர்த்துச் செலுத்துவதற் குரியதற்கோப்பாகும். தேகமாகிய புணையை முயற்சியாகிய துடுப்பினால் இடையூறுகளாகிய அலைகளை யெதிர்த்துச் செலுத்தும் போது நாம் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது ஒன்றுண்டு அதாவது கப்பலோட்டிக்குத் துறைமுகத்தின் மீது நாட்டமிருப்பதைப்போல் நம்முடைய அறிவை நாம் பிறவிக் கடலுக்குத் துறைமுகமாகிய கடவுளிடத்தில் நிலைபெறச் செய்யவேண்டுவதே. அப்படிச் செய்வோமானால் அடைய வேண்டிய நற்பதவியை நாம் தடையில்லாமல் அடையலாம்.

ஆ! ஹா! அதோ எதிர் தோன்றும் மதுவனம் என்ன ஆனந்தத்தைத் தருகின்றது. நாரதர் கூறிய இம் மதுவனம் நமக்குகந்த அற்புத பவனமே யெனலாம். அவர் உபதேசித்தக் காருண்ய மூர்த்தியினது திவ்விய நாமாமிர்தத்தை நாம் உட்கொண்டு நமதைம் பொறிகளையும் புலன்கள்மேற் செல்ல விடாமல் நம்மால் கூடிய வரையிலும் அடக்கித் தவஞ்செய்வோம். நமக்கெவ்வித யிடையூறும் வராதவாறு காத்து ரக்ஷித் தருள்புரியவேண்டியது அவனது கடமையன்றோ! நாம் ஸ்நான சந்தியா வந்தன முடித்தமர்ந்து நிஷ்டைகூடுவோம். [போகிறான்]

(சீன் முடிவு)

சீன்-18. இடம்—மதுவனம்.

நடிகர்:—துருவன், சேவகன், கொலைஞன்

[துருவன் தவத்திலிருக்கிறான். விஷங் கலந்த பலகாரத்தை ஓர் தட்டிலெடுத்துக்கொண்டு சேவகன் வருகிறான்]

சேவ. வ-ம்:—எங்க மவராணி, சுர்சிஅம்மா அவுங்க, வெசங்கலந்த பலகாரத்தே இந்தப் பயலுக்கு கொடுத்து கொண்ணூட்டு வாச் சொன்னாவ, என்னசெய்றது! மவராணிசொல்லக் கேட்டாக்கா மவராசனா பூடலாம். இல்லாப்போனா அரமனை வேலையும் காலியாய்விடும். இங்கேவந்து இந்தப் பயலபாத்தா மனசு கேக்கலே. அவன் என்னமோ கண்ணை மூடிக்னு வாயே முணுமுணுண்ணு பெனத்துறான். எப்படி இந்த பலகாரத்தே அவனுக்குக் கொடுக்ரது, (யோசித்து)

ஆமா, அதுதான் சரி. இங்கே வைச்சுட்டுப் பூட்டா, பயமுயிச்சிப் பாத்து பசிக்கு எடுத்துத் தின்னூடுவான். அப்பொறம் அவன் சாவுறான் இருக்கிறான், நமக்கென்ன.

பலகாரத் தட்டை ஓர் பக்கம் வைத்துவிட்டு மவராணிகிட்டப் போயி துருவம்பயலே கொண்ணூட்டோமிண்ணி சொல்லி பணம் வாங்கிக்கலாம்.

[போகிறான், கையில் கத்தியைப் பிடித்துக் கொண்டு கொலையாளி வருகிறான்]

கொலை. வ-ம்:—ஆத்தாடி நம்ப மவுராணியாலே இண்ணுமொத நமக்கு வாய்வு வந்திடிச்சி. தாய்வு போயிடிச்சி, நாலரைகாணி நெலம் வாங்கிப் போட்டுடலாம், வேறேவேல வாணும், தூங்கித் தூங்கி எயுந்து சுடுசோறு சாப்புடலாம். கள்ளுத்தண்ணியுங் களஞ்சியமாக் குடிக்கலாம், அடேயப்பா, அதோ தவுசு பண்ராரு ராசா புள்ளே. ஒரே வெட்டு வெட்டிட்டு வாயிண்ணி சுர்சிமவுராணி எம்புட்டு பணங் கொடுத்தாவ. ஆ! கிட்டப்போயி ஒரு வெட்டு ரெண்டு துண்டாக்கிட்டு பூடலாம்.

[பலகாரத்தட்டைப் பார்த்து]

ஓ! வோ! பயலுக்கு பலவாரம் வந்திருக்கையா, சுநீதியம்மா மவனுக்கின்னு அனுப்பிச்சாவளாக்கும், பேசு என்ன மணம் வீசுதுங்கறேன். ராசாங்க துண்ற பலகாரமாயிது, ஆயாடி என் அதிருஷ்டமே அதிருஸ்டம், இண்ணைக்கி எம்மாத்ரம் பணம் கெடைச்சுது பலவாரம் கெடச்சுது. இத்தை துண்ணூட்டுத்தான் ராசா மவனே கொல்லணும்.

[உட்கார்ந்து பலகாரத்தைத் தின்கிறான்]

57102

அம்மாடி, ஏ ஆத்தே, ஆயா, ஐயையோ, வவுத்துவுள்ளே போன பலவாரம் என்னமோ செய்யுதே. அடடே! நெஞ்சிலே ஆ இல்லே இல்லே மார்லே வந்தடைக்குதே. எம்மாடி! என்னடை இது எய்வு கொடலப் பொறட்டுதே ஐயோ! ஐயோ!! ஆத்தா.

[கீழ்விழுந்து புரண்டுருண்டு சாகிறான்]

(சீன் முடிவு)

சீன்—19. **இடம்—இந்திரன் தர்பார்.**

நடிகர்:—தேவேந்திரன், தேவர்கள், மகருஷிகள்.

[இந்திரனது தர்பாரும், தேகமும் அக்கினி ஜ்வாலை வீசக்கண்டு]

இந்திரன் பாட்டு

(பத்திசாதிக்கலிடாது என்ற மெட்டு)

பல்லவி

என்னமாயமிதுதானே வுடல்
எரியுங்காரணமறியேனே (என்)

அநுபல்லவி

பொன்னுலகத்தோரே போற்றுஞ்சபையோரே
தன்மையுணர்ந்தோரே சாற்றும்பதில்சீரே (என்)

சரணம்

ஆராலித்துன்பம்வர லாச்சு—எங்கும்
அனல்விட்டெரியசோக மாச்சு
பேரார்முனிவர்செய்யும் பெரியதவந்தானோ
நேராகவுரைசெய்வீர் நேர்ந்ததிதுயேனோ (என்)

வ-ம்:—தேவர்களே! மகருஷிகளே! நமது சபையானது இன்று அமைதியின்றித் தத்தளிப்பதுடன் தணலானது என்னால் சகிக்க முடியாமல் வீசுகிறது. இத்தகைய கடுந்தவத்தைப் பூலோகத்தில் செய்பவர்கள் யாவர்.

தேவர். வ-ம்:—வஜ்ஜிராயுதா! சுவாயம்புமநுவின் பௌத்திரன் உத்தானபாத மகாராஜ புத்திரன் துருவன் என்னும் பெயர் கொண்ட ஐந்துவயதுற்ற அறியாச் சிறுவன் செய்யும் தவ மகிமையே இவ்விதஞ் செய்கிறது.

இந். வ-ம்:—என்ன ஆச்சர்யம்! இவ் விளவயதில் இத்தகைய தவ மியற்றும் போதனை சக்தியை அவனுக்குக் கற்பித்தார்,

தேவர். வ-ம்:—மகாத்மாவாகிய நாரதமுனிவர்தான்.

இந். வ-ம்:—நல்லது எக்காரணத்தைக் கருதி அப் பாலகன் இக் கொடிய தவஞ் செய்கிறான்.

தேவர். வ-ம்:—அவனது இளந் தாயாகிய சுருசியம்மாளின் பொறாமைக் குணத்தால் அவனுக்கேற்பட்ட அவமானத்தைக் கருதி இத்தவ மியற்றுகிறான்.

இந்திரன் பாட்டு

(ஏதுநான்செய்வேனடி என்ற மெட்டு)

கண்ணிகள்

பாலகன்செய் தவமழிக்க பாருஞ்சீராக நேராக
காலமீது ஜாலமானால் காணும்வெகுநீதே இப்போதே (பா)

சாமபேத தானதண்ட சதுர்விதத்தாலே இந்நாளே
ஆமவனின்மனமயங்க ஆனதொருவிதமே இக்ஷணமே (பா)

வ-ம்:—தேவர்காள்! இதுசமயமே அந்த தவத்தை யழிக்க முயல வேண்டும். இல்லையாகில் எனக்கு ஆபத்தேற்படுமென்பதிற் சந்தேகமில்லை. ஆகவே, அதிசீக்கிரத்தில் பூதகணங்களை ஏவியும், அவனது தாயைப்போலொரு மாயா சுநீதியை ஏவியும், அவன் தவத்தை யழிக்க முயற்சி செய்யுங்கள்.

தேவர். வ-ம்:—எங்களா லானவரை செய்து பார்க்கிறோம்.

இந். வ-ம்:—நல்லது இனி சபை கலையலாம். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—20. **இடம்—மதுவனம்.**

நடிகர்:—பூதகணங்கள், மாயா சுநீதி, துருவன்.

[துருவன் தவத்தி லமர்ந்திருக்க பூதகணங்கள் ஆடிக்கொண்டு வருகிறது]

பூதங்கள் பாட்டு

(அகாரகாரணத்துளே என்ற மெட்டு)

கண்ணிகள்

மொண்டிசண்டி கண்டிதிண்டி மொட்டைமுநி யாண்டியே
ஒண்டிதண்டி பண்டியண்டி ஓட்டைவீர னாண்டியே
அண்டிநின்று இந்தமைந்தன் ஆவியே கலங்கிட
இன்றுவந்து எங்கள்முன்பு இந்தவேலை செய்குவாய் (மொ)

காளிகூளி நீலிசூலி கட்டைக்கருப் பாண்டியே
ஆளிபோல வாய்பெருத்த அஞ்சுகண்ணு மூஞ்சியே
வேளியாடி நின்றவீரன் வித்தைகற்ற சூரியே
பாலனிவ னுயிர்கொள்ளப் பக்கத்துணை யாகுவீர் (மோ)

[பூதங்கள் ஆரவாரத்துடன் துருவனை விழுங்க நெருங்குகிறது. தவாக்கினி யின் ஜ்வாலை கிட்ட வரவொட்டாமல் தடுக்கவே]

பூத. வ-ம்:—அடடே பசங்களா! இவனைத் துண்ண நம்மாலு மாகாது; இந்திரனாலு மாகாது. வாங்கடா ஓடிப்பூடுவோம்.

[பூதங்கள் போகவும் மாயா சுநீதி வருகின்றாள்]

மாயா. வ-ம்:—தேவர்களின் கட்டளைப்படி இம் மாயாசுநீதி வேஷ மெடுத்து வந்திருக்கிறேன். இந்தச் சிறுவன் துருவனோ வெகு உக்ரமான தவஞ்செய்கிறான். இவனது தவத்தைக் கலைக்க எவராலு மாகாதென்பது நிச்சயம். (யோசித்து) உம் நமக்கே னிக்கவலை. நாம் கொண்டுவந்த வேஷத்தின்படி சுருசி நம்மை அடித்து விட்டதாக ஒப்பாரி வைத்துப் புலம்புவோம். அதற்கிவன் என்ன செய்கிறான் என்பதைப் பார்ப்போம்.

[துருவனிடமணுகி]

மாயாசுநீதி பாட்டு

(காட்சிக்கண்ணி என்றமெட்டு)

அப்பப்பாஎன்மகனே அடித்தாளடாசுருசி
அநியாயமிதைக்கேளடா மகனே மகனே மகனே
அநியாயமிதைக்கேளடா (அப்)

உன்னையுதைத்தவளு மென்னையுமடித்தாளே
உற்றதுயரந்தீரடா மகனே மகனே மகனே
உற்றதுயரந்தீரடா (அப்)

ஏதுமற்றவளென்று ஏசியடித்தாளடா
மாதுஎன்முகம்பாரடா மகனே மகனே மகனே.
மாதுஎன்முகம்பாரடா (அப்)

வ-ம்:—அப்பா துருவா! உன்னை வுதைத்துத்தள்ளிய பாவி சுருசி யானவள் நீ காட்டிற்கு வந்த விவரமறிந்து, அவளென் குடிசைக்கு வந்து என்னையும் பலவிதமாகத் திட்டினதுமன்றி வுதைத்துக் குடிசையைவிட் டோட்டிவிட்டாளடா திக்கற்ற

பாவிபோல் நானுன்னைத் தேடிவந்தேனடா. கண்விழித்தென்னைப் பாரடா. மகனே உண்மையில் நானுன்னைப் பெற்றதாய் சுநீதிதானடா. உடனே எழுந்து என்பின் நீ வருவாயாகில் நாமிருவரும் போயவளைப் பதிலுக்கு பதில் அடித்துவருவோமடா. என் செல்வமே! எழுந்திரென்னுடன் வாடா.

[அருகிற்போக ஜ்வாலை வீசுகிறது]

ஐயோ! இதென்ன கிட்ட நெருங்கவொட்டாமல் தணல்வீசுகிறதே. சரி; சரி; நம்மாலுமாகாது. அந்த நாராயணனாலுமாகாது இம் மைந்தன் தவத்தை யழிக்க, நமக்கேன் இக்கஷ்டம் தேவராஜனிடம் சென்று உண்மையைக் கூறிவிடலாம். [போகிறாள்]

(சீன் முடிவு)

சீன்—21. இடம்—திருப்பாற்கடல்.

நடிகர்:—மகாவிஷ்ணு, இலட்சுமி, இந்திரன், தேவர்கள.

[மகாவிஷ்ணு சேஷசயனத்திருக்கிறார் தேவர்கள் கடலருகில் நின்று துதிக்கிறார்கள்]

தேவர்கள் பாட்டு

இராகம்-முகாரி, தாளம்-ரூபகம்.

பல்லவி

வைகுந்தநாதா வானவர்நாங்கள்
வாடிவந்தோமெங்கள் வருத்தத்தைதீரும் (வை)

அநுபல்லவி

கைதந்தமூர்த்தியே கலங்கிநின்றோங்காரும்
மெய்கொண்டதெய்வமே வேளைஎங்கள்முன்வாரும் (வை)

சரணம்

துருவனென்னுமொருசிறுவன்செய்யுந்தவத்தால்
உருவமிழக்கநாங்கள் வோடிவந்தோம்பயத்தால்
பருவமிதுவேவந்து பாதுகாத்தருள்செய்வீர்
திருமாலெனும்பேர்கொண்ட தீனரட்சகரேநீர் (வை)

வ-ம்:—சுவாமி, பூலோகத்தில் பெருமை வாய்ந்த சுவாயம்புமநுவின் புத்திரரான உத்தானபாத மகாராஜன் மனைவி சுநீதி என்பவளுக்குப் பிறந்த துருவனென்னுஞ் சிறுவன் தனது சிற்றன்னை

யாகிய சுருசியின் கொடுஞ் செய்கையால் மனமயங்கி, நாரதரா லுபதேசம் பெற்று மதுவனம் வந்து, தங்களைநாடி அருந்தவஞ் செய்யு மச்சிறுவனின் தவாக்கினியானது எங்களைத் தகிக்கிறது. எங்களாலாகிய தந்திரோ பாயங்களைச் செய்தும், அவனது தவத்தைக் கலைக்க முடியவில்லை. இன்னமும் தாங்கள் கவனியா திருப்பீர்களாகில் எங்கள் இந்திரலோகமே எரிந்து விடும்போ லிருக்கிறது. சுராட்சகராகிய தாங்கள் இது சமயம் எங்களைக் காப்பாற்ற வேண்டும் ஐயனே.

மகா. வ-ம்:—தேவர்காள்! இதற்காகவா; எல்லோரும் ஏகமுகமாக இங்கு வந்தீர்கள். ஓர் அறியாச் சிறுவனது தவத்திற்கு இவ்விதம் பயப்படுவீர்க ளாகில் ஏனைய மகான்களின் தவத்தைக் கண்டால் நீங்களே இந்திர லோகத்தை விட்டுப் போய்விடுவீர்கள் போலிருக்கிறது. ஆயினும் தேவர்காள், இதுசமயமே நானுமது.

மகாவிஷ்ணு பாட்டு

இராகம்-நாட்டைகுறிஞ்சி, தாளம்-ரூபகம்.

பல்லவி

மனமகிழ்ந்திடுமார்க் — கஞ்செய்குவேன்
மாதேவகணங்காள் — தேவைதெரிந்து (மன)

அநுபல்லவி

தினகரனெனுஞ் — சிறுவன் துருவன்
செய்யுந்தவத்தினால் — நொய்யுமுமதொரு (மன)

சரணம்

இடத்தையுமுங்கள் திடத்தையுநல்ல
வடத்தையும்பெற நினைத்திலனவன்
சடத்தைவெறுத்து அடத்தைத்தைப்பிடித்து
தனித்ததுருவன் இடத்தையடுத்து (மன)

வ-ம்:—தேவேந்திராதி தேவர்காள்; தவமியற்றும் துருவனது உள்ளக்கருத்தை நான் நன்கறிவேன் அவனா லுங்களுக்கு எவ்வித இடையூறும் நேராது. நீங்கள், பயமடைய வேண்டாம். இந்த க்ஷணமே நானங்கு சென்று அவனது தவநிலையறிந்து கோரும் வரங் கொடுத்துத தவத்தைக் கலைத்து வருகிறேன். நீங்கள் செல்லுங்கள்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

[illegible]—22. இடம்—அரண்மனை.

நடிகர்:—உத்தானபாதன், சுநீதி, நாரதர்.

[உத்தானபாதன் துருவனை நினைத்து வருந்துதல்]

உத்தானபாதன் பாட்டு

(பலுகேபங்காரமாயரா என்ற மெட்டு)

பல்லவி

தெரியாமல்மோசம்போனேனே — தெய்வமேநானே (தெ)

அநுபல்லவி

பரிதாபமாகமைந்தன் — பாழும்வனமேசெல்ல
பழிகாரிசுருசிதன் — மொழியாலெடுத்துச்சொல்ல (தெ)

சரணம்

கண்மணிதுருவனைக் — காண்பதெந்நாளோநானே
பெண்மணிசுநீதிதான் — பெருமையதனைத்தனே (தெ)

வ-ம்:—என் கண்ணே துருவா உனது உதாரகுணத்தையும், மனவைராக்கியத்தையுஞ் சிறிதேனு மதித்துப்பாராது மோசம் போனேனே. அந்தப் படுபாவியாகிய சுருசியின் பசப்பிற் கட்டுண்டு தேசமிகழும் வகைக்காளானேனே. என் செல்வமே! இப்போது நீ எங்கிருக்கின்றனையோ? எங்கு சென்றனையோ? அப்பா துருவா! அடர்ந்த ஆரண்யத்தில் எப்படியடா தவமியற்றுவாய்; கொடிதாகிய மிருகங்களைக் கண்டு எப்படியடா மனந் துணிந்திருப்பாய். ஆ தெய்வமே! என்போன்ற ஒருவன் இவ்வுலகத்துண்டா.

[அயர்ந்து வீழ்கின்றான். சுநீதி எடுத்து உபசரித்து]

வ-ம்:—நாயகா! இதென்ன பிரேமை. தாமிப்படி மனம் வருந்தினால் பாலகன் வந்துவிடுவானா? காதலா! கவலை வேண்டாம்; எவ்விதத்துந் துருவன் தனதெண்ணப்படி பகவானைக் கண்டு நல்வரம் பெற்றுவருவான். (எதிர்ப்பார்த்து) ஓஹோ நாதா! அதோ வீணாகானங் கேட்கிறது; நமக்கருள் புரிந்த நாரத மகாத்மா வருகிறார்போல் தெரிகிறது. வாருங்கள் எதிர்சென்றழைத்து வாலாம்.

[நாரதர் வருகிறார்; உத்தானபாதன் சுநீதியுடன் சென்று அழைத்து வந்து]

உத்தானபாதன் பாட்டு

(காட்சி கண்காட்சியே என்ற மெட்டு)

பாதாரவிந்தமே பணிந்தேன்
ப்ரமானந்தமே (பாதா)

மகுடங்கள்

பார்புகழ்வேதத போதனரேவுமது (பாதா)
பரிமளமதுதரு நறுமணமிலகிய (பாதா)
ஆதாரமாகவந்த ஆரணநாரதசுவாமி (பாதா)

வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்; இவ்வாசனத்தி லெழுந்தருளக் கோருகிறேன்.

[நாரதர் ஆசனத்தமர்ந்து]

நார. வ-ம்:—சர்வ மங்களம்பெருக வாழ்வீர்! மன்னர் மன்ன உனக்கு ஏற்பட்ட குறையென்ன? அரண்மனை அழகு குலைந்து காணப்படுகின்றதே! காரணம் என்ன? உன் புத்திரர் இருவரும் சுகமோ? செல்வத்திற் சிறந்த உனக்குமா துன்பம் உண்டாகவேண்டும்? மகபதிக்கும் மனவாட்டம் உண்டு; என்னும் உலக வழக்கிற்கு நீயும் இலக்காயினையோ! உற்ற குறையை யொளியாமற் கூறு.

உத்தா. வ-ம்:—சுவாமி! எனக்கு இரண்டு புத்திரர்கள் உண்டென்பது தேவரீருக்குத் தெரிந்ததே. அவர்கள் இருவருள் மூத்தவன் துருவன் என்பவன் பாவியேனுடைய கொடுமையால் அவன் என்னைவிட்டுப் பிரிந்து காட்டிற்குப் போய்விட்டான்.

நா. வ-ம்:—அவன் ஏன் காட்டிற்குப் போகவேண்டும்.

உத்தா. வ-ம்:—சுவாமி! தாங்கள் மூன்றுலகங்களிலும் அன்றன்று நடக்கும் விந்தைகளை நேரிற் சென்று கண்டறிய வல்லவராகையாலல்லவா? தங்களுக்குத் திரிலோக சஞ்சாரி என்ற பெயர் வழங்குகிறது? அப்படியிருந்தும் தேவரீர் ஒன்றும் அறியாதவரைப்போல் நடிப்பது எதைக் குறித்தோ என்பதை அறியேன்.

நாரதர் பாட்டு

(வாராய் வாராய் வைகுந்தா என்ற மெட்டு)

கண்ணிகள்

ஏனோவீணே யேங்கிடலானாய் நீமன்னனே
நானேகண்டேன் துருவன்தன்னை ஞானவனே (ஏ)

வருவானரியின் பாதங்கண்டுன் மாமகனே
தருவான்சேவை விடுவாய்துன்பம் தாயகனே (ஏ)

நா. வ-ம்:—நான் உன் விஷயத்தை யுணர்ந்தேன் நீ துன்பப்படவேண்டாம். எல்லா வுயிர்களுக்கும் பொதுவாக யிருந்து நீதி செலுத்தவேண்டியது பார்த்திபன் கடமை.

ஆகையினால் அரசன் ஒருநாளும் முறை பிறழ்ந்து நடத்தல் அடாது. அவ்வாறிருக்க, நீயோ உன் மனைவியர்களிடத்திலேயே மாறுபாடுடையவனாக நடந்துகொண்டாய் அதனால் உனக்கிவ்வளவு துன்பம் நேர்ந்தது. உன் புத்திரசிகாமணியாகிய துருவனை—அடவிற் கண்டேன். அவனிடமிருந்து நடந்ததை யுணர்ந்தேன் அவனுடைய வீரமும், தெய்வபக்தியும், பணிவும் இவ் விளம் பருவத்தில் யாரிடத்தில் காணக்கிடைக்கும்? அவனைத் திருமால் தடையின்றிக் காப்பார் அவன் சீக்கிரத்தில் நற்கீர்த்தியுடன் திரும்புவான் நீங்கள் இருவரும் மதுவனமார்க்கம் நாடிச் செல்லுங்கள் அவனைக் காணலாம்.

சுநீதி. வ-ம்:—தயாநிதியே! இன்றே நான் புனர் ஜென்மம் எடுத்தேன். என் பதியும் கரைகாணாத பேரின்பத்தை யடையும் மார்க்கமுற்றார். நமஸ்காரம்! அடியேங்களை ரக்ஷித்தருளும் கோவே. (இருவரும் பணிதல்)

நார. வ-ம்:—ஆசிர்வாதம். (நாரதர் போகின்றனர்)

சுநீதி. வ-ம்:—நாதா! நாம் செய்த பூர்வ கன்மவினைகளெல்லாம் இன்றுடன் அறவே யொழிந்தன. தாங்கள் சீக்கிரம் புறப்படுங்கள் சுதனைக் காணலாம்.

உத்தா. வ-ம்:—கண்மணி! குழந்தை இன்னமும் என்மீது சீற்றங் கொள்வனோ என என் மனம் தத்தளிக்கின்றன என் செய்வேன்.

[illegible]ம்:—கோவே! என் சஞ்சலங் கொள்கின்றீர். வாடும் பயிரை [illegible]ழிக்கப் பொழியும் மேகம்போல, நாரத பிரம்மம் தெரிவித்த [illegible]காரம் குழந்தை நம்மீது த்வேஷங் கொள்ளான். எல்லாம் இனி குதூகலமாக முடியும்.

உத்தா. வ-ம்:—நல்லது; கருணாகரசொரூபியான காளிங்கநர்த்தனரூபன் நம்மைக் காப்பாரென்பதிற் சந்தேகமில்லை. வா செல்வோம். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—23.

இடம்—மதுவனம்.

நடிகர்:—துருவன், மகா விஷ்ணு

[மகாவிஷ்ணு பிராப்தமாகித் துருவனைப் பார்த்து]

மகாவிஷ்ணு பாட்டு

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

எவன் தானிவன்போல் தவ மிவ்வுலகிற்புரிந்தான்
என்மனம்ப்ரமிக்கின்றதே (எவ)

அநுபல்லவி

கவலைதனையறுத்துக் கருத்தைநிலைநிறுத்தி
சவலமனமில்லாமல் தாரகத்தைநினைத்து (எவ)

சரணம்

தேவரெலாநடுங்க தேசமெங்கும்விளங்க
ஆவலுடன்வனத்தி லாசனமிட்டமர்ந்து (எவ)

வ-ம்:—ஆஹா என்ன பக்தி! என்ன வைராக்கியம்; பக்தனென்றால் இவனன்றோ பக்தன். இச்சிறுவன் உச்சரிக்கக்கூடிய துவாதசாக்கரமந்திரத்தை இதுவரையி லெவரும் உச்சரிக்கக் கண்டிலேன். தன்னை மறந்து இவன் தவநிலையி லமர்ந்திருக்குங் காட்சி என் மனதைப் பரவசப்படுத்துகின்றன. ஆயினும், இவன் நம்முருவத்தையே உள்ளத்திற் பதித்து வீற்றிருப்பதால், நேரில் நாம் வந்து நிற்பதையுங் கவனியா திருக்கின்றான், ஆகவே இவனது மனத்திலுதித்த நம்முருவை மறைத்துக் காட்டுவோமாகில் கண்விழித்துப் பார்ப்பான்.

[மகாவிஷ்ணு வடிவம் துருவன் மனதில் மறைகிறது. துருவன் கண்விழித்து எதிரே நிற்கும் விஷ்ணுவைப் பார்த்து]

துருவன் விருத்தம்

மண்டலம் நிறைந்ததிங்கள் வதனமுங் கமலக்கண்ணும்
குண்டலஞ் சுடருங்காதுங் குறுநகைப் பவளவாயும்
தண்டுழா யலங்கல்மார்புந் தடக்கையோர் நான்குமாகக்
கண்டனன் மறையுங்காணுக் கரியவ னுருவமம்மா.

வ-ம்:—ஹே பக்தவத்ஸலா! பத்மநாபா! பகவானாகிய தம்மை நேரில் தெரிசித்து ஆனந்தமடைந்தேனே தவிர, தமது பாதாரவிந்தத்தை ஸ்தோத்திரஞ்செய்யும் வகை தெரியாது நிற்கிறேன்.

[விஷ்ணு தனது சங்கினால் துருவனது முகத்தைத் தடவுகிறார்]

துருவன் விருத்தம்

[illegible]லந்தருஞ்செல்வந் தந்திடுமடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும்மற்றுந் தந்திடும்பெற்ற தாயினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லைநான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னுநாமம்.
(பிரபந்தம்)

வ-ம்:—ஓம் ஹரிவாசுதேவா! அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா! அச்சுதா! உச்சிதா! ஆயா! மாயா! அடியாரிடர்தீர்க்கும் நேயா! வெண்ணையுண்ட வாயா! ஸ்ரீமந் நாராயணா! பிரம்ம பாராயணா! அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

மகா. வ-ம்:—ஆசீர்வாதம்; குழந்தாய் துருவா! உனது தவத்திற்கு மெச்சித் தெரிசனந் தந்தேன். கோரிய வரங் கேள் தருகிறேன்.

துருவன் விருத்தம்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங்கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

வ-ம்:—சுவாமி! சதாவும் தங்களது நாமஸ்மரணை செய்து பாதாரவிந்தத்தைச்சேவிக்கும் பாக்கியத்தையே அடியேன்கோருவது.

மகா. வ-ம்:—(புன்சிரிப்புடன்) மணிமுடிதரித்த மன்னவன் புத்திரனும் உன்னுடைய அருமையான தவத்திற்கு மெச்சினோம். நீ பதங்கள் எல்லாவற்றிலும் மேலானபதத்தை யடையக் கருதினாய். அது எமக்குத் தெளிவாயிற்று; உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் அன்னமயத்தினால் உயிர்பிழைத் திருக்கின்றன. அன்னத்திற்கு முதற்காரணம் மழை; அம் மழைக்கு காரணகர்த்தாவா யுள்ளது சூரியன். அது ஆகாயத்தில் ஒளி செய்துக்கொண் டிருக்கின்றது. அதைச் சுற்றிலும் பல நட்சத்திரங்களும், கிரகங்களும் உலவிக்கொண் டிருக்கின்றன; அவைகளுள் மிகச் சிறந்த நட்சத்திரம் ஒன்றுண்டு. அது பொன்மயமாகிய மேருமலையின் உச்சியிலிருந்து ஒளி வீசுகின்றது; அது ஒருநாளும் அழியாததாகும். அந்தப் பதவி தேவர்களுக்கும் கிடைத்தற்கு அரியதாகும். அப் பதவியை நாம் உனக்குத் தருகிறோம். நீ நீடூழி வாழக்கடவாய். எனினும், அந்த நக்ஷத்திரத்திற்கு 'துருவ நக்ஷத்திரம்' எனப்

புனைப்பெயர் தந்தோம். அது அந்திநேரம், தீபமேற்றும் சமயம் பிரகாசந் தரும். அதைப் பயபக்தியுடன் தரிசிப்போர்களுக்கு நீங்காத பேரின்பமுத்தியை எளிதில் அடைய அருள் புரிந்தோம். மேலும், நீ இளஞ் சிறுவன்; உலக இன்பங்களை சிறிதும் அறியாதவன். ஆகையினால், நீ உன் நகரத்திற்குச் சென்று சிறிது காலத்திற்குப் பிறகு உன் தந்தையின் அரசையேற்றுக்கொண்டு பல்லாண்டுகள் வரையில் ஆட்சி புரிந்து பிறகு நாம் கூறிய பதவியைப் பெற்றுக்கொள். நான் சென்று வருகிறேன் சிரஞ்சீவியாய் வாழ்குவாய்.

துரு. வ-ம்:—நமஸ்காரம் தேவதேவனே! (பகவான் மறைதல்) என்னே என் அறியாமை! முதல்வரைக் கண்டு முத்தியைப் பெறாமல் இருந்துவிட்டேனே. நான் மறுபடியுமா நகரத்திற்குச் சென்று அரசு செலுத்தவேண்டும்? இனி என்ன செய்வது கடவுள் கட்டளைக்கு ஒருதடையும் இருக்கிறதோ.

வெண்பா

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமுங்கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. (பேயாழ்வார்)

வ-ம்:—நான் கண்டேன்! கண்ணாரக் கண்டேன்! அவர் நாமத்தை வாயாரத் துதித்துவிண்டேன்! அவரது ஆனந்த பேரின்பத்தை உட்கொண்டேன்! என்னப்பனின் சாமளஸ்வரூபமமைந்த திருமேனியினது ஜோதிர்ய ஜோதி. என்ன அற்புதம்,

துருவன் பாட்டு

பல்லவி

ஹரிவாசுதேவனே (ஹரி)

அநுபல்லவி

ஷீராப்திநேசா ஸ்ரீலோகவாசா
ஆதாரனே பரந்தாமனே
தாமனே பூமனே நேமனே வாமனே (ஹரி)

சரணம்

ஆபத்சகாயா அடியார்தன்நேயா
காப்பாற்றவேணு மலர்க்கண்ணனே
கண்ணனே வண்ணனே மன்னனே விற்பன்னனே (ஹ)
சங்குசக்ராதரா தாசர்க்ருபாகரா
சங்கரலிங்கனின் சகாயனே
சகாயனே மாயனே தூயனே நேயனே (ஹ)

(சீன் முடிவு) [போகிறான்]

சீன்—24. இடம்—வீதி.

நடிகர்:—துருவன், உத்தானபாதன், சுநீதி.

[எதிரில் வரும் தாய் தந்தையைக் கண்ட துருவன்]

துரு. வ-ம்:—பிதா! நமஸ்கரிக்கின்றேன். தன்யனானேன், கிருதார்த்தனானேன் எல்லாம் தங்களது திருவருளினாலே பெறுதற்கரிய மேலான பதவியைப் பெற்றுவந்தேன். தாயே! நமஸ்காரம்.

சுநீ. வ-ம்:-கண்ணே துருவா! நான் பெற்ற செல்வமே! "அவனன்றியோரணுவும் அசையாதென்பதை என்போன்றார் எவ்வாறுணர்வர் எல்லாம் அவன் செயல்" அவனருளாற்றால் அனைவரும் உற்றாரல்லவா? கண்களிழந்து தவித்தோர்க்கு கண்களீந்து ஒளிபெற உதவிய உன்னை நான் பூர்வத்தில் செய்த புண்யத்தால் பெற்றேனல்லவா வருவாய்.

துரு. வ-ம்:—அம்மணி! எல்லா மழியும் பாண்டம்; நாற்ற மடிக்கும் தேகம் ஆயினும் அழியாப் பொருளாகிய அப்பன்; ஆலிலைமேற் றுயின்ற நாதன்; அருள்நிறைந்த போதனின் அருள் பிரசாதம் எனக்கெவ்வித யிடையூறுமின்றி சுகம்பெற்று நாடினேன்.

[போகின்றனர்]

உத். வ-ம்:—ஆனந்தம் ஆனந்தமே!

(சீன் முடிவு)

சீன்—25. இடம்—அரண்மனை.

நடிகர்:—உத்தானபாதன், சுநீதி, துருவன், சுருசி, உத்தமன்.

[துருவன் சுருசியைக் கண்டதும் வணங்கி]

துருவன் பாட்டு

(வேட்டையாடிடுவோம் என்ற மெட்டு)

கண்ணிகள்

பாதமேபோற்றினேன் — பாதுகாவென்னம்மணி
ஆதரவுடனேஎன்னை — யாண்டருள்வாயம்மணி (பா
பாலனாமெனக்கேயிந்த — பாக்கியங்கொடுத்தாயே
காலத்தில்தவம்புரியக் — கற்பனைஎடுத்தாயே

வ-ம்:—அம்மணி! துருவன் நமஸ்கரிக்கின்றேன்; அன்னைக்கு ... யாயும் குருவுக்கு குருவாயும் எனக்கு வாய்த்த தா... ... தனை மனதிற் கருதாதென்னை ஆட்கொள்ள வேண்...

[உத்தமன் துருவனை...

உத். வ-ம்:—அண்ணு! நமஸ்காரம்; (சுருசியைக் காட்டி) எனக்குத் தாயாக உதித்த இம் மகாராசியாலல்லவா தாங்கள் வனம்போக நேர்ந்தது. அண்ணு! இச்சண்டாளியின் முகத்தில் நாம் விழிக்கப்படாது.

துரு: வ-ம்:— தம்பி! உத்தமா? இதென்ன இப்படிப் பேசுகின்ருய் நமது தாயின் வாய்மொழியாலல்லவா ஸ்ரீமந் நாராயணனைத் தரிசனம் செய்து அழியாப் புகழ்பெற்று வந்தேன். என் தாயை இனி அவ்விதம் பேசாதே?

உத். வ-ம்:—இல்லையண்ணு!

துரு. வ-ம்:—தந்தையே! தாங்களும் என்மாதாவை நிராகரிக்காது முன்போ லங்கீகரிக்க வேண்டுகிறேன்.

உத். வ-ம்:—உன்னிஷ்டப் படியே அங்கீகரித்தேன்.

சுநீ. வ-ம்:—தங்கா! விசனத்தை விடு ஏனொரு விதமாக நிற்கின்ருய், உன்ஞல் விளைந்தயாவும் பின்ஞல் நன்மையாகவே முடிந்தது. நடந்ததை மறந்து பிள்ளைகளுடன் கூடி வாழலாம் வருவாய்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—26. **இடம்—தர்பார்.**

நடிகர்:—உத்தானபாதன், ஞாஞசிரியர், துருவன், உத்தமன், சுருசி, சுநீதி, பிரைஜைகள், மந்திரிபிரதானிய .

O—, 892 MS L7, T
N33

[துருவனுக்கு ஞாஞசிரியர் பட்டாபிஷேகம் செய்து உத்தமனுக்கு இளவரசு பட்டம் கட்டுகிருர்.]

சகலரும் பாடுதல்.

ஆனந்தச் சோபனமே ... தானன்புக்கே மனமே
ஆலிங்கன ஸ்தாபனமே ... மேலுங்கண் டோமுனமே
ஆரம்பம் பாரெங்கும் ... ஆணும் பெண்ணுந்தான்
சேரும்பண் பேகொண்டுந் ... தோணுங் கண்ணுந்தான் (ஆ)
அதிமதுரித ரகசியமண் ... டாருக் குத்தான்
...ாதுவிதியிது மதி பேசும் ... பேருக் குத்தான்
ஆமுத்தி ... வுக்கி ... தே செப்புமே
மாமுத்து ... சயிக்கு ... ளே ஒப்புமே . (ஆ)

59102

நாடகம் முற்றுப்பெற்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1933.

சங்கீத ஸாஹித்திய சந்தவண்ணச் சரபம்

ச. சீ. சங்கரலிங்கக் கவிராயரியற்றிய

புதிய டிராமா சரித்திரங்கள்:

			ரூ.	அ.	பை.
கோவலன் சரித்திரம்	[நாடக ரஞ்சிதம் மலர்	1]	0	6	0
நல்லதங்காள் சரித்திரம்	,, ,,	2	0	6	0
லலிதாங்கி சரித்திரம்	,, ,,	3	0	6	0
ஸ்ரீ பாமா விஜயம்	,, ,,	4	0	6	0
பாதுகா பட்டாபிஷேகம்	,, ,,	5	0	6	0
ஸ்ரீ ராமதாஸ் சரித்திரம்	,, ,,	6	0	6	0
தூக்கு தூக்கி சரித்திரம்	,, ,,	7	0	6	0
சத்தியவான்-சாவித்திரி	,, ,,	8	0	6	0
நந்தனார் சரித்திரம்	,, ,,	9	0	6	0
ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடக ரஞ்சிதம்"			3	0	0
சகுந்தலா	[நாடக ரத்னம் மலர்	1]	0	6	0
காலவரிஷி	,, ,,	2	0	6	0
சிறுத்தொண்டன்	,, ,,	3	0	6	0
மார்க்கண்டேயர்	,, ,,	4	0	6	0
குலேபகாவலி	,, ,,	5	0	6	0
பீஷ்மர் பிரதிக்ஞை	,, ,,	6	0	6	0
சக்குபாய்	,, ,,	7	0	6	0
காளிதாஸ்	,, ,,	8	0	6	0
துருவ சரித்திரம்	,, ,,	9	0	6	0
ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடக ரத்னம்"			3	0	0

தியானுமிர்த செந்தமிழ்த் திலதமென்னும்

புதிய பக்திரசக் கீர்த்தனம்

		ரூ.	அ.	பை.
முதற் பாகம்	... ...	0	5	0
இரண்டாம் பாகம்	... ...	0	5	0

வகை

சிவஷண்முகம்பிள்ளை அவர்களியற்றிய

டிராமா சரித்திரங்கள்:

	ரூ.	அ.	பை.
சம்பூர்ண இராமாயணம் 12-பாகங்களடங்கியது	2	0	
வ	0	4	

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருப்பு[illegible] [illegible]ண்டிங்டிப்போ, [illegible]